# அடிகளாசிரியரின்
# தொல்காப்பியப் பதிப்புகள்

முனைவர் அ. சிவபெருமான்




UG 7188

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# அடிகளாசிரியரின்
# தொல்காப்பியப் பதிப்புகள்

(திருமதி வசுமதிபாரதி -
டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு)


முனைவர் அ. சிவபெருமான்
இணைப்பேராசிரியர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-395 - 6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 352

நூல் : அடிகளாசிரியரின்
தொல்காப்பியப் பதிப்புகள்

ஆசிரியர் : முனைவர் அ. சிவபெருமான்

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2040, மார்கழி
முதற்பதிப்பு - டிசம்பர் 2009

பக்கம் : 88 + 4

அளவு : டெம்மி 1/8

தாள் : டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ

படிகள் : 1200

விலை : உரூ. 60.00

ஒளியச்சு : முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,
தெற்கு வீதி, தஞ்சாவூர்.

அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக
மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

வை. கண்ணபுரக்கண்ணன்
எம்.ஏ.,பி.எட்.,எம்.ஃபில்.,
இயக்குநர் (பொ)
பதிப்புத்துறை

அரண்மனை வளாகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 001.

## பதிப்புரை

தமிழ்மொழிக்கு ஆக்கம் நல்கும் அரிய நூல்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அவ்வரிசையில் 'அடிகளாசிரியரின் தொல்காப்பியப் பதிப்புகள்' எனும் இந்நூல் இப்போது உங்கள் கைகளில். அடிகளாசிரியரின் மகன் பேராசிரியர் முனைவர் அ. சிவபெருமான் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றினார். அப்பொழிவின் வடிவமே இந்நூல். தமிழின் முழுமுதல் இலக்கண நூல் தொல்காப்பியம். பிறமொழிகளில் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. தொல்காப்பியரோ வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்துப் பொருளதிகாரத்தைப் படைத்த புதுமையாளராகத் திகழ்கிறார். தொல்காப்பியத்திற்கு உரையாசிரியர்கள் பலர் உரையெழுதியுள்ளனர். அவற்றில் பல இடங்களில் பாடவேறுபாடுகளும் உரை மாறுபாடுகளும் காணக் கிடக்கின்றன. முதுபெரும் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள் இவற்றையெல்லாம் நன்கு ஆய்ந்தறிந்த தமிழறிஞர் ஆவார். தாம் பதிப்பித்த தொல்காப்பியப் பதிப்புகளில் உரையாசிரியரின் உரையைத் தருவதோடு அமையாமல், பொருள் மாறுபாடு காணப்படும் இடங்களில் உரையாசிரியர்கள் பிறர் எழுதியுள்ள உரைகளையும் தக்க எடுத்துக்காட்டுகளையும் தந்து, இஃது ஏற்புடையது; பொருந்துமேற்கொள்க; மேலும் ஆராயத்தக்கது எனும் வகையில் நயமுடன் முடிவினையும் தரும் பாங்கினை இவரது பதிப்புகளில் காணலாம். இவற்றையெல்லாம் தெளிவாக எடுத்துரைக்கிறது இந்நூல்.

இந்நூல் அச்சிட்டு வெளியிடப்பெற ஆக்கமும் ஊக்கமும் அளித்து ஆற்றுப்படுத்திய மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு நன்றியுடையேன். நூலாசிரியர் முனைவர் அ. சிவபெருமான், அறக்கட்டளைச் சொற்பொழிவிற்கு ஆவன செய்து பணியாற்றிய அரிய கையெழுத்துச் சுவடித்துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் (கூடுதல் பொறுப்பு) முனைவர் சா. கிருட்டினமூர்த்தி, கணினியச்சு செய்தளித்த முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் திரு. வை. இராமமூர்த்தி, அட்டைப் படம் உருவாக்கித் தந்த திரு. சௌத்திரி, பதிப்புத்துறை - அச்சகப் பணியாளர்கள் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் அ. சிவபெருமான்
இணைப்பேராசிரியர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

## முன்னுரை

அடிகளாசிரியரின் தொல்காப்பியப் பதிப்புகள் பற்றிச் சொற்பொழிவாற்றும் அரிய வாய்ப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் எனக்கு வழங்கியது. அடிகளாசிரியரின் பல்வேறு பதிப்புகளில் தொல்காப்பியப் பதிப்புகள் பற்றிய செய்திகளையும், அப்பதிப்புகளின் தன்மைகளைப் பற்றியும் தெரிவிக்கும் வகையில் அச்சொற்பொழிவை நான் ஆற்றினேன்.

அடிகளாசிரியரின் தொல்காப்பியப் பதிப்புகள் எளிமைப் படுத்தப்பட்ட முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளவை என்பதே அவற்றின் தனிச்சிறப்பாகும்.

தொல்காப்பியத்தை உணர்ந்து கொள்ள இளம்பூரணர் உரையே ஏற்றது என்பது அடிகளாசிரியரின் துணிபாகும். எனவே, எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் - செய்யுளியல் மற்றும் ஏனைய எட்டு இயல்கள் ஆகியவற்றைப் பதிப்பிக்க இளம் பூரணர் உரையையே தேர்வு செய்தார். அவ்வாறே பதிப்பித்தும் வந்துள்ளார்.

அடிகளாசிரியர் தொல்காப்பியப் பதிப்புகளைப் பதிப்பித்த வகை 1. அடிகளாசிரியரின் வாழ்வும் தொல்காப்பியப் பணிகளும், 2. அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப்பிய எழுத் ததிகாரம், 3. அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப் பியச் சொல்லதிகாரம், 4. அடிகளாசிரியரின் இலக்கணப்பதிப்பில் தொல்காப்பியச் செய்யுளியல் ஆகிய நான்கு தலைப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிகளாசிரியரின் முதல் தொல்காப்பியப் பதிப்பான தொல்காப்பிய எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை பல்லாண்டு களாக அடிகளாசிரியர் மனத்தில் ஊறியிருந்த செய்திகளின் தொகுப்பே ஆகும். பல்லாண்டு கால மனப்பாடத்தை நான்கு ஆண்டுகள் முயன்று எழுத்தாக்கினார். ஓராண்டு அச்சிட்டார். இத்தொடர் முயற்சியின் பயனாகக் கனிந்ததே எழுத்ததிகாரப் பதிப்பு.

எழுத்ததிகாரப் பதிப்பின் மேன்மையைக் கண்ட பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மாணாக்கர்கட்குப் பாடஞ்சொல்ல இப்பதிப்பினையே பயன்படுத்தி வருவாராயினர். இப்பதிப்பின் சிறப்பை உணர்ந்த தமிழ்ப்பல்கலைக்கழக முதல் துணைவேந்த ராகிய மாண்பமை வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் அடிகளாசிரி யரை அப்பல்கலைக்கழகத்தின் சுவடித்துறையில் சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணிநியமனம் செய்து, தொல்காப்பியப் பதிப்பு களைப் பதிப்பித்து வழங்கும் பணியை அவரிடம் ஒப்படைத்தார்.

அடிகளாசிரியர் இடையறாத உழைப்பினை நல்கிச் சொல்லதிகாரம், பொருளதிகாரச் செய்யுளியல், செய்யுளியல் தவிர்த்த ஏனைய எட்டுஇயல்கள் ஆகியவற்றுக்கு இளம்பூரணர் உரையைப் பதிப்பித்து வழங்கும் பணியைச் சிறப்பாகச் செய்து முடித்தார்.

மேற்குறித்த கடினமான பணிகளின்போது அடியேனாகிய நான் என் தந்தை அடிகளாசிரியருடன் தங்கியிருந்து அவர்களுக்கு உணவு ஆக்கித்தந்தும், பணிவிடைகள் புரிந்தும், பதிப்புப் பணி களில் உதவியும் தொண்டாற்றினேன். எனவே, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொடக்க காலம் முதலே பல்கலைக்கழகத் தோடும், சுவடிப் புலத்தோடும், அரிய கையெழுத்துத் துறை யோடும் எனக்குத் தொடர்ந்து உறவு இருந்து வருகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் பொருள்தந்து ஓலைச்சுவடிகளை வாங்கிக் கொண்டிருந்த காலத்தில் தமிழகமெங்கும் தேடி யலைந்து இருநூறுக்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளைத் திரட்டித் தொகுத்து அவற்றைப் பல்கலைக்கழகச் சுவடித்துறைக்கு நன் கொடையாகவே வழங்கியுள்ளேன். சில கைவினைப் பொருட் களையும் பல அரிய நூல்களையும் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு

நன்கொடையாக வழங்கியுள்ளேன். ஒருமுறை தமிழ்ப் பல்கலைக் கழகம் நடத்திய பொருட்காட்சியில் தீவிபத்து ஏற்பட்டபோது நானும் பலருடன் கூடிப் பல்கலைக்கழகப் பொருட்களைக் காப்பாற்றியுள்ளேன். இச்செயல்களையெல்லாம் அறிந்த மாண்பமை துணைவேந்தர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் சுவடிப் பணிக்காக எனக்கு நாட்படியும் பயணப் படியும் வழங்க ஆணையிட்டார்கள். அத்துடன் என்னைப் பாராட்டி நற்சான்றி தழும் வழங்கியுள்ளார்கள்.

இவ்வாறு பல்கலைக்கழகத்தின் தொடக்கம் முதல் இன்று வரை பல்வேறு நிலைகளில் பல்கலைக்கழகத்தோடு நல்லுறவு வைத்துள்ளேன். இரண்டு துறைகளில் பாடத்திட்டக்குழு உறுப் பினராகப் பணியாற்றும் வாய்ப்பினையும் பெற்றேன்.

என் தந்தையார் திரு. அடிகளாசிரியர் இன்றும்கூடத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மேன்மேலும் சிறப்புற வேண்டுமென்று இறைவனை இறைஞ்சி வருகின்றார். நானும் அவ்வாறே இப்பல்கலைக்கழகம் வளர்வதிலும் வளர்பணிகள் ஆற்றுவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடனும் அடக்கத்துடனும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழிய நலம்.

இயல் : 1

# அடிகளாசிரியரின் வாழ்வும் தொல்காப்பியப் பணிகளும்

## 1.0. முன்னுரை

அறக்கட்டளையின் பொழிவுத் தலைப்பு, 'அடிகளாசிரியரின் இலக்கணப்பதிப்புகள்' என்பதாகும். ஆதலால், முதலியலில் அடிகளாசிரியரின் வாழ்வையும் தமிழ்ப்பணிகளையும் எடுத்துக் கூறி அதன்பின் அவர் செய்துள்ள இலக்கணப் பதிப்புகளை வகைப் படுத்தி விளக்க முற்படுகின்றேன். இவ்வகையில் இவ்வியல் அடிகளாசிரியரையும் அவரின் இலக்கணப் பதிப்புகளையும் பாயிரம்போல் விளக்க முனைகின்றது.

## 1.1. அடிகளாசிரியரின் பிறப்பு, இளமை, கல்வி, குடும்பம், பணி

அக்காலத்தில் தமிழகத்தைச் சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என்ற மூன்று பகுதியாகப் பிரித்து ஆட்சி செய்தனர். சோழநாடு பரப்பளவில் பெரியதாக இருந்ததால் அதன் வடக்குப் பகுதியைத் தொண்டைநாடு எனப் பிரித்திருந்தனர். இத் தொண்டை நாடு பிற்காலத்தில் திருமுனைப்பாடிநாடு, நடுநாடு, மகதமண்டலம் எனப் பெயரிடப்பட்டிருந்தது. இதன் நடுப் பகுதி யாகத் தற்போது வழங்கப்பட்டு வரும் விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி (இப்பகுதி குறிஞ்சி நிலப்பகுதி என்பதால் கல்லக் குறிச்சி என்றுதான் எழுதப்படல் வேண்டும்) வட்டத்தின்

தென்கோடியில் சின்னசேலத்திற்குத் தெற்கில் 12. கி.மீ. தொலைவில் குகையூர் என்னும் சிவத்தலம் அமைந்துள்ளது. இவ்வூரை இலக்கியங்கள் குகையூர் என்றும், கல்வெட்டுகள் கூகையூர் என்றும் குறிப்பிடுகின்றன. கூகையூர் அல்லது குகையூர் என்னும் சிவத்தலமே அடிகளாசிரியரின் பிறந்த மண்ணாகும்.

திருமூலநாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் குகையூருக்கு வந்து ஆற்றங் கரைப் புதருள் தங்கி, சிவயோக சமாதியை மேற்கொண்டிருந்தார். அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார். குகையூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்த நாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து அவருக்குப் பணிவிடை செய்தொழுகினான். அம் மாலாங்கனி லிருந்து அவன் பரம்பரை சித்தநாதேச்சுராதீனமாக ஆயிற்று. அப் பரம்பரையில் பிற்காலத்தில் பட்டத்துப் பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி குங்குமவல்லி அம்மாள் ஆவார். இவ்விருவருக்கும் *10.5.1910* - இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனுர் இலக்கினத்தில் பூச நாளில் அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார். இவரின் பிள்ளைப் பெயர் குருசாமி ஐயர் என்பதாகும். பிற்காலத்தில் தனித் தமிழ் இயக்கத் தலைவர் மறைமலை அடிகளாரின் கருத்துப்படி அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக் கொண்டார்.

அடிகளாசிரியருடைய இளமைக்காலம் வளமுடையதாக இல்லை. தந்தையாரே இவருக்கு முதன்முதலில் எழுத்துப் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். இவரின் தந்தையார் இவருக்காகவே சிலமாணவர்களைச் சேர்த்துக் கொண்டு சிறிய பள்ளியொன்றைத் தம் வீட்டிலேயே தொடங்கினார். அடிகளா சிரியர் அப்பள்ளியில் நன்றாகவே படித்து வந்தார். இருப்பினும் ஏழாவது வயதில் இவரின் தந்தை இறந்து விடவே கல்வி, மூன்றாம் வகுப்போடு நின்றது. தந்தையை இழந்த நிலையில் தாய்மாமன்களின் அரவணைப்பிலும், அவர்கள் வழங்கிய கல்வியறிவிலுமாகச் சுடர்பெற்று வளர்ந்தார். தானே முயன்று நூல்களைக் கற்றுப் புலவர் பட்டத் தேர்வெழுதி வெற்றி பெற்றார். அன்றுமுதல் இன்று வரை கல்விக் கடலில் நாவாயெனக் கற்றுத் தவழ்ந்து கொண்டே இருக்கின்றார்.

1937 - ஆம் ஆண்டில் புலவர் பட்டம் பெற்ற அடிகளாசிரியர் 14.7.1938 ஆம் நாளில் மயிலம் கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக்கழக ஒப்புதலைப் பெற்றபின் பன்னிரண்டு ஆண்டுகள் பேராசிரியராகவும் துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

1950 - ஆம் ஆண்டில் கரந்தைத் தமிழ்க் கல்லூரிக்கு ஆசிரியராக அமர்த்தப்பட்ட அடிகளாசிரியர் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் அக்கல்லூரியின் பேராசிரியராகப் பொறுப்பேற்றுச் சிறப்புடன் கல்லூரியை நடத்தி வந்து 1970 - ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் தனியார் கல்லூரி ஒன்றில் மூன்றாண்டுகள் முதல்வராகப் பணியாற்றினார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளராக ஓராண்டு பணியாற்றினார். தஞ்சைத்தமிழ்ப்பல்கலைக் கழகச் சுவடிப்புலத்தில் சிறப்புநிலை இணைப்பேராசிரியராகவும் மூன்றாண்டுகள் பணியாற்றினார்.

1985க்குப் பிறகு மூப்பின் காரணமாக இல்லத்தில் இருந்தவாறே தனது 98-ஆம் வயதில் இன்றும் சிறந்த தமிழ்ப்பணியாற்றி வருகின்றார்.

நான்கு ஆண்மக்கள், நான்கு பெண்மக்கள், துணைவியார் என்ற அளவில் குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட அடிகளாசிரியர் தன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் கல்விப் பணியாற்றுவதையே விரும்புகின்றார்.

## 1.2. அடிகளாசிரியரின் தமிழ்ப்பணிகள்

திருமூலரின் வழிவந்த வீரசைவப் பழங்குடிப் பண்பான பேதைமை மறுத்தல் அடிகளாசிரியரின் அடிப்படைப் பண்பாகும். தமிழ் மொழியும், வடமொழியும் இறையுணர்வின் இருகண்கள் என்ற கூற்று பேதைமையுடையதே என்பது அவர்தம் கருத்து. எனவே, தமிழ்ப் பண்பிலிருந்து வடமொழிக்குச் சென்ற கருத்துகளை மீட்டெடுக்க அவர் வடமொழியை நன்கு கற்றார். பின்னர் வடமொழி நூல்களில் தமிழ்ப்பண்புகள் ஆரியப் பண்புகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையை அறிந்து அவற்றைத் தம்

பேச்சினாலும், எழுத்தினாலும் வெளிப்படுத்தி வருவாராயினர். எனவே, தமிழ்மறை எனப்படும் திருமந்திரத்தையும், பொதுமறை எனப்படும் திருக்குறளையும் தன் வாழ்நாளில் கடைப்பிடிக்கும் மறைகளாகக் கொண்டார்.

> என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே[1]

என்ற திருமந்திரத்தையே தனக்கிடப்பட்ட தெய்வ ஆணையாகக் கொண்டு தமிழ்ப்பணி செய்து வருகின்றார்.

காலம் முழுவதும் கற்பதிலேயே கழித்தாலும் மிகைப் பட்ட அறிவால் புத்திலக்கியம் புனைய விரும்பாது முன்னோர் மொழிந்தவற்றைப் பின்னோர் அறியப் பதிப்பிக்கும் பணியே பழுத்த சுவைதரும் பணியென்று தொல்காப்பியம் முதலான இலக்கண நூல் உரைகளையும், சமயம் சார்ந்த நூல்களையும், சித்தர்களின் பாடல்களையும் தம்நெறியாகக் கொண்டொழுகும் திருமந்திரத்தின் பல பகுதிகளையும் பதிப்பித்து முப்பது நூல்களின் பதிப்பாசிரியராக விளங்கி வருகிறார்.

அத்துடன் நில்லாது தம் மனத்தில் தமிழ்மொழி உயர்வுக் கெனத் தோன்றிய கருத்துகளை இருபத்தியேழன் எண்ணிக்கை நூல்களாக வடித்தெடுத்துத் தந்துள்ளார். ஆக இறப்பிலும் பிறப்பிலும் உலகின் துய்ப்பிலும் தமிழ்ப்பணியே தம் பணியென மெய்ப்பித்து வருகின்றார்.

## 1.3. அடிகளாசிரியரின் இலக்கண ஆர்வம்

இலக்கியங்கட்கு உரையெழுதுவோர் தம் குறிப்பையே உரையாகக் கூறுவர். இதனால் உரையெழுதுவது இயல்பாக எளிதாக அமைந்துவிடும். இலக்கண உரையாசிரியர்கள் மரபு வழுவாது கருத்து கூறவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். இதனால் அவர்கள் மரபு கருதி கடின நடையில் உரையை எழுதித் தங்கள் பணியை நிறைவு செய்வர். அது கற்பாருக்கு எளிதில் விளங்குவதில்லை.

இந்த இறுக்கமான சூழலில்தான் அடிகளாசிரியர் உரைக்கே உரைவிளக்கம் எழுதிப் பதிப்பிக்கும் முறையைக் கையாண்டு கற்பாருக்கு உதவ முன்வந்தார். இது எளிய செயலன்று. நிறையக் கற்க வேண்டும். நிறைய எழுத வேண்டும். இதற்காக நிறையச் சிந்திக்க வேண்டும். இலக்கணத்தில் ஆர்வம் இல்லையென்றால் செய்கின்ற பணி சிறக்காது. அடிகளாசிரியர் இலக்கணத்தில் அளவுகடந்த ஆர்வம் கொண்டு கற்று, சிந்தித்து, எழுதி வெற்றி பெற்றுள்ளார்.

இந்த ஆர்வம் மீதூர்ந்த காரணத்தால் இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். இலக்கணத்தில் தெளிவு பிறந்தபின் இலக்கண நூல்களில் ஏற்பட்டுள்ள பிழைகள் புலப்பட்டன.

ஒருமொழியைப் பிழையின்றி வழங்கச் செய்வதற்குக் கருவியாயிருப்பது அதன் இலக்கண நூல்களாம். அவ்விலக்கண நூல்களே பிழைபட வழங்குமாயின் அந்நூல்களால் அம்மொழி திருந்துவது எப்படி? என்று மனம் வருந்திக் கூறுகின்றார்.

இந்த வருத்தம் அவருக்கு இலக்கணத்தின் மீதுள்ள அளவற்ற ஆர்வத்தைக் காட்டுகின்றது. இலக்கணத்தின் மீதுள்ள ஆர்வத்தினால் தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரத்தில் செய்யுளியல் ஆகியவற்றை மிகவும் முயன்று மூன்று பெரும் நூல்களாக இளம்பூரணர் உரையுடன் பதிப்பித்துள்ளார்.

பொருளதிகாரத்தில் செய்யுளியல் நீங்கலாக எட்டு இயல்களையும் ஆராய்ந்து எழுதி முடித்துள்ளார். ஐவகையடி என்ற தொல்காப்பியச் சூத்திரத்தை ஆய்ந்து ஆய்வுக் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். அக்கட்டுரையைச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் வெளியிட்டுள்ளனர்.

தமது பிற இலக்கியப் படைப்புகளிலும், பதிப்புகளிலும் இலக்கணத்திற்கு இன்றியமையாத இடம் தந்து, ஆங்காங்கே இலக்கண விளக்கங்களைக் கூறிச்செல்வது இவரது வழக்கமாகும். தனக்கு இலக்கணத்தின் மீதுள்ள ஆர்வத்தைப் போன்றே மாணாக்கர்களும் இலக்கணத்தை விரும்பிக் கற்க வேண்டும் என்று விரும்ப

வார். அதனால் அடிகளாசிரியரிடம் பயின்ற மாணாக்கர்கள் சிறந்த இலக்கணப் புலமையுடன் திகழுகின்றனர்.

மாணவர்கள் மட்டுமன்றித் தம்மிடம் நட்பு பூண்டொழுகும் தமிழன்பர்களையும் இலக்கணத்தின்பால் வற்றாத ஆர்வம் கொள்ளச் செய்வது அடிகளாசிரியரின் தனித்திறனாகும். சான்றாக, செயங்கொண்டசோழபுரம் கி. இறைக்கோவைக் குறிப்பிடலாம்.

அடிகளாசிரியர் இலக்கணத்தின்பால் ஆராக் காதல் கொண்டவர் என்பதற்கு அவரின் இளமைக்கால நிகழ்வு ஒன்றைச் சான்றாகச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இளம் வயதில் தந்தையை இழந்து தாய்மாமன் அரவணைப்பில் வளர்ந்து வந்த அடிகளாசிரியர் இலக்கண நூல்களை ஆர்வமுடன் மனனம் செய்தார். நன்னூல், காரிகை ஆகியவற்றை முயன்று மனனம் செய்தபின், அவற்றை முறைப் படிப் பாடங்கேட்க விரும்பினார். அவரது உறவினரான திரு.குமார வீரையர் அவர்கள் முசிறியில் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராக இருந்தார்கள். அவர்கள் நன்னூலைப் பாடஞ்சொல்ல முன் வந்தார்கள்.

அடிகளாசிரியர், தாய்மாமன் வீடிருந்த பெரம்பலூரையடுத்துள்ள நெடுவாசலில் இருந்து கிளம்பி முசிறிக்குச் சென்றார். காலையில் பழைய சோறு உண்டுவிட்டு ஒரு ரூபாயுடன் கிளம்பி மாலை ஆறுமணிக்கு ஓரணாவுடன் முசிறியை அடைந்தார். வழியிலே உணவு ஏதும் உண்ணவில்லை. மனம் முழுவதும் நன்னூல் நிரம்பிக் கிடந்ததால் வயிறு உணவு கேட்கவில்லை போலும்!

ஒரு திங்கள் காலம் திரு. குமாரவீரையர் அவர்களிடம் நன்னூல் பாடங்கேட்டுத் தெளிவு பெற்றார். ஒரு நாள் காலையில் பழஞ்சோறு உண்டு விட்டு ஊருக்குக் கிளம்பினார். திரு. குமார வீரையர் அவர்கள் தன் அருமை மாணாக்கரை வழியனுப்ப அரைக் கல் தொலைவு நடந்து வந்தார்கள். ஒருவாறாக அடிகளாசிரியர் ஆசிரியர் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டார். அப்போது

ஆசிரியர் அவர்கள் 'தம்பி இதை வழிச் செலவுக்கு வைத்துக் கொள்' என்று கூறி இரண்டு ரூபாய் தந்தார்கள்.

அடிகளாசிரியர், 'எனக்கு வழிச்செலவிற்குப் பணமிருக் கின்றது, வேண்டாம்' என்றார். அதற்கு ஆசிரியர் அவர்கள், தம்பி நீ இல்லாத போது உன் துணி மூட்டையை அவிழ்த்துப் பார்த்தேன். அதில் ஓரணாதான் இருந்தது. அதை வைத்துக் கொண்டு எப்படி ஊருக்குச் செல்வாய்? என்று கேட்டார்கள்.

'அடியேனுக்கு ஒரு திங்கள் காலம் இலவசமாக உணவும் போட்டு, அரிய நன்னூலைப் பாடமும் சொல்லிய உங்களுக்கு நானல்லவோ குரு காணிக்கை தரவேண்டும்? நான் பரம ஏழை யாயிருப்பதால் குருகாணிக்கை தர வழியில்லை. தங்களிடம் பணம் பெற்றுக்கொள்ள என்னால் இயலவில்லை. இதோ இந்த ஓரணாவைக் கூடச் செலவு செய்யாமல் ஊருக்கு நான் நடந்தே போய்விடுவேன்' என்று கூறிய மாணாக்கனின் பக்குவ நிலையைக் கண்டு மகிழ்ந்து போனார்கள் திரு. குமாரவீரையர் அவர்கள். 'தம்பி நீ கூறியபடியே சென்றாலும்... எப்படியிருந்தாலும் கையில் பணம் இருப்பது நல்லது. நீ நீண்ட தொலைவு செல்ல வேண்டுமல்லவா?' என்று வற்புறுத்திப் பணத்தைத்தந்து வழியனுப்பி வைத்தார்கள்.

நன்னூல் பாடங்கேட்பதை இலக்காகக் கொண்டு பல கல் தொலைவு நடந்து சென்று உணவு மறுத்து, வேட்கை மறுத்து, பாடங் கேட்டதிலிருந்து அடிகளாசிரியரின் இலக்கண ஆர்வம் தெற்றெனத் தெரிகின்றது[2].

## 1.4. அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்புகள்

அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்புப் பணிகளைக் கீழ்வரும் ஆறுபிரிவுகளாகக் கொள்ளலாம்.

1. அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப்பிய எழுத்ததிகாரம்.

2. அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப்பியச் சொல்லதிகாரம்.

3. அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப்பியப் பொருளதிகாரம் (செய்யுளியல்).

4. அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப்பியப் பொருளதிகாரம் (செய்யுளியல் நீங்கலாக ஏனைய எட்டு இயல்கள்)

5. அடிகளாசிரியரின் செய்யுளியல் ஆராய்ச்சி வெளியிடப் பட்டுள்ளது.

6. ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு அடிகளாசிரியரின் விளக்கம்.

மேற்கூறிய பிரிவுகளின் அடிப்படையில் ஒவ்வொன்றாய் நோக்குவோம். அவ்வாறு நோக்கும் போது சுருக்கமாகச் செய்திகளை அறிந்து அதன்பின் முதல் மூன்று தலைப்புகளை மட்டும் தனித்தனி இயலாக ஆராய்வோம்.

## 1.4.1. அடிகளாசிரியரின் இலக்கணப்பதிப்பில் தொல்காப்பிய எழுத்ததிகாரம்

பேராசிரியர் திரு. அடிகளாசிரியரவர்கள் 1969 - ஆம் ஆண்டில் தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரையைப் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பை அவர் சொந்தப் பொருட் செலவில் வெளியிட்டுள்ளார் என்பது குறிக்கத்தக்க செய்தியாகும். ஏறத்தாழ நான்காண்டு காலத்திற்குமேல் கடும் உழைப்பை மேற்கொண்டு அந்நூலை உருவாக்கியுள்ளார். அச்சுப் பணிக்கே ஓராண்டுகாலம் செலவிட்டார் என்பது குறித்தற்குரியது.

சிறப்புப் பாயிரத்திற்கு மட்டும் இருபது பக்க அளவில் விளக்கவுரை எழுதிப் பாயிரத்தைப் பற்றி மாணாக்கர்கள் அறிந்து தெளியும் வண்ணம் பல சான்றுகளை எடுத்தோதியுள்ளார். நூன் மரபைப் பற்றி முப்பத்தைந்து பக்கங்களில் தெளிவுபடுத்தியுள்ள முறை இலக்கணம் கற்பதை எளிதாக்கி இலக்கணத்தின்பால் ஆர்வமுற வழிவகுக்கின்றது.

நூற்பாக்குறிப்பு என்று அடிகளாசிரியர் தருகின்ற குறிப்புகள் தனிச்சிறப்புடன் திகழ்கின்றன. கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்களுக்கு எழுத்ததிகார இளம்பூரணர் உரையினைப் பாடஞ் சொல்லுவதற்காகவே ஆழ்ந்து படித்து வந்ததால் இவ்வரிய நூல் நமக்குக் கிடைத்துள்ளது. இச்செய்தியை அவரே பின் வருமாறு எழுதியுள்ளார்.

'தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரையினைக் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்க்குப் பல யாண்டுகட்கு முன்னர் பாடஞ் சொல்லத் தொடங்கி அதனை ஆழ்ந்து படித்து வந்தேன். அப்பொழுது அதிற் பல பிழைகளிருப்பது புலனாயிற்று; அவற்றைத் திருத்துவதாயின் அதற்கு யான் உய்த்துணர்ந்த உணர்ச்சியேயன்றி, ஏட்டுச்சுவடி முதலிய கருவிகளின் துணையும் வேண்டுமென்று கருதினேன்'.[3]

தொல்காப்பிய எழுத்ததிகார வளர்நிலை பதிப்பில் அடிகளாசிரியரின் பதிப்பு மிகச்சிறப்பானதாகும். இப்பதிப்பின் பல்வேறு சிறப்புகளைத் தனி இயலாக அறிவோம்.

## 1.4.2. அடிகளாசிரியரின் இலக்கணப்பதிப்பில் தொல்காப்பியச் சொல்லதிகாரம்

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அடிகளாசிரியரின் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை - இளம்பூரணர் உரையுடன் கூடிய பதிப்பை 1990 - ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டது. இந்நூலை உருவாக்க அடிகளாசிரியர் மேற்கொண்ட முயற்சிகள் கடினமானவை. ஓயாத பணிகளுக்கிடையிலும் அடிகளாசிரியர் பதிப்புப் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்.

திருப்பாதிரிப்புலியூர் கவத்திரு ஞானியார் மடத்து ஓலைச்சுவடி, திருவாவடுதுறை ஆதீனத்து ஓலைச் சுவடி, இது வரையிலும் அச்சுக்குவந்துள்ள அச்சுப்படிகள், மற்றும் ஏனைய தமிழிலக்கண, இலக்கியங்களையும் கருவிகளாகக் கொண்டு ஆய்வு செய்து இந்நூலைப் பதிப்பிக்க முடிவு செய்தார்.

ஏறத்தாழ முப்பத்தைந்து நூல்களைத் துணை நூல்களாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளார். சேனாவரையர், கல்லாடர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகியோரின் தொல்காப் பிய உரைகளையும், பேராசிரியர், மயிலைநாதர், சங்கர நமச் சிவாயர் போன்ற இலக்கண நூல் உரையாசிரியர்களையும், நிகண்டுகளையும் எடுத்தாண்டு மேற்கோள் காட்டிச் சொல்லதி காரம் தெளிவு பட அறிதற்கு வேண்டிய எல்லாத் தகவுகளையும் ஆய்ந்து அளித்துள்ளார்.

இதனை உரைநூல் என்பதைவிட ஒப்பீட்டு ஆய்வு நூல் என்று கருதத்தக்க அளவிற்குப் பிறஇலக்கண நூல்களையும், அவற்றின் உரைகளையும் ஒப்பிட்டுக் காட்டி விளக்கிச் சென்றுள்ளார்.

மேலும் இப்பதிப்பு குறித்த சிறப்புகளை வருகின்ற தனி இயலில் காண்போம்.

## 1.4.3. அடிகளாசிரியரின் இலக்கணப்பதிப்பில் தொல்காப்பியப் பொருளதிகாரம் செய்யுளியல்

'தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல் இளம்பூரணர் உரை' என்னும் இந்நூலைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையினர் 1985 - ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் அச்சிட்டுள்ளனர்.

அடிகளாசிரியர் இந்நூலைப் பதிப்பிக்க வேண்டி முதற் கண் ஆய்வில் இறங்கினார். வழக்கறிஞர் திரு. வ.உ. சிதம்பரம் பிள்ளை செய்யுளியல் பதிப்பு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நச்சினார்க்கினியர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் இளம்பூரணர் உரை ஆகிய பதிப்புகளையும், யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகை உரை, வீரசோழிய உரை, நேமிநாத உரை, வெண்பாப்பாட்டியல் உரை, இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சிதம்பரப் பாட்டியல் உரை, முத்துவீரியம் ஆகிய நூல்களையும் தொல் - பொருள் - செய்யுளியல் பேராசிரியர் உரையையும் கருவிகளாகக் கொண்டு ஆய்வை முற்றுவித்தார்.

உரை நுதலியபொருள், சுவடி வேறுபாடு, பாட வேறுபாடு, உரை விளக்கம், குறிப்பு என்று நூற்பாக்களை மென்மையாக்கப் பல கருவிகளைக் கையாண்டுள்ளார். நுதலிய பொருளும், உரையும் காணப்படாத நூற்பாக்களுக்குக் குறிப்பின் வழி விளக்கம் தந்து நிறைவு செய்துள்ளார்.

நூற்று அறுபது பக்கங்களுக்கு மேலாகப் பாடல் முதற்குறிப்பகராதி, உரைப்பொருளடைவு அகராதி ஆகியவற்றைத் தந்து ஆய்வு மாணாக்கர்கட்குப் பெரிதும் உதவி செய்துள்ளார்.

முதல் நூற்பாவினைப் பதினான்கு பக்கங்களில் விளக்கிச் செல்லும் இவரது பரந்துபட்ட ஆய்வறிவிற்கு இணை இல்லையென்றே கருதலாம். இந்நூலின் பதிப்புச் சிறப்புகளைத் தனி இயலில் அறிவோம்.

### 1.4.4. அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப்பியப்பொருளதிகாரம் (செய்யுளியல் நீங்கலாக எட்டு இயல்கள்)

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தினர் வேண்டுகோளுக்கு இணங்க அடிகளாசிரியர் தொல் - பொருளதிகாரத்தின் செய்யுளியல் தவிர்த்த ஏனைய இயல்களுக்கு உரைப்பதிப்பு வெளியிட ஆய்வுகள் மேற்கொண்டார். இவ்வாய்வின் பயனாக எட்டு இயல்கள் பற்றிய நெடிய ஆய்வு முடிவுகளைத் தொகுத்தார். அதன் கையெழுத்துப் படியைத் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தாருக்கு உரித்தாக்கியுள்ளார்.

இப்பதிப்பிற்கென அடிகளாசிரியர் கருவி நூல்கள், துணை நூல்கள், ஓலைச்சுவடிகள், அச்சுப் பதிப்புகள் ஆகியவற்றைக் கொண்டு விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். களவியல், கற்பியல் ஆகிய இயல்களை மிகவும் ஆழ்ந்து ஆய்வு செய்து - விளக்கக் குறிப்புகளுடன் தந்துள்ளார். இந்நூல் அச்சிடப்பட்டு வெளிவரும் நிலையில் பேராசிரியர்களும், மாணவர்களும் பெரிதும் பயன்பெறுவர் என்பது திண்ணம்.

## 1.4.5. அடிகளாசிரியரின் தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி

அடிகளாசிரியர் யாப்பின்மேல் மிகுந்த ஆர்வமுடையவர். ஆதலால் தொல்காப்பியச் செய்யுளியல் இளம்பூரணர் உரையைப் பதிப்பித்ததோடு நில்லாமல் ஆராய்ச்சியையும் மேற்கொண்டிருந் தார். அவர், அவ்வாராய்ச்சியைப் பல்வேறு காலங்களில் பல்வேறு நிலைகளில் செய்துகொண்டிருந்தார். அவரின் அவ்வாராய்ச்சியைத் தேடித் தொகுத்து ஒழுங்கு செய்து நூலாக்கம் செய்யப் பெரிதும் முனைந்தேன். இப்பணியை யான் பலஆண்டுகளாகச் செய்து வந்தேன். தற்பொழுதுதான் அப்பணி நிறைவுற்று நூலாக்கம் பெற்று அச்சுவாகனம் ஏறவுள்ளது. அடிகளாசிரியர் செய்யு ளியலுக்கு எழுதியுள்ள அவ்வாராய்ச்சி நூல் அரிய கருவூலமாகும்.

## 1.4.6. ஐவகையடியும் என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு அடிகளாசிரியரின் விளக்கம்

ஐவகை யடியும் விரிக்கும் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே.[4]

என்ற தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் செய்யுளியலின் சூத்திரத்திலே ஐயம் ஏற்பட்டு, அது தெளிவிப்பார்க்கு ஆயிரம் உருவா பரிசென இராசபாளையம் மணிமேகலை மன்றத்தார் அறிவித்ததற்கிணங்க அடிகளாசிரியர் எழுதியுள்ள விளக்கக் கட்டுரையே ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் ஆகும்.

இக்கட்டுரையைப் பின்னாளில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை அச்சிட்டு வெளிப் படுத்தியுள்ளது.

போட்டியை அறிவித்த மணிமேகலை மன்றத்தார் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் அவர்களை நடுவராக இருக்கக் கேட்டுக் கொண்டது. அவர், வந்த கட்டுரைகளை ஆய்ந்து அடிகளாசிரியரின்

கட்டுரையே பரிசு பெறத் தகுதியுடையது எனினும் ஐயத்தைத் துணிய இயலாமையால் பாதிப்பரிசு தருக என முடிவு செய்தார்.

இக்கட்டுரையில் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், யாப்பருங்கலவிருத்தி ஆசிரியர் ஆகியோரது கருத்துகளின் அடிப்படையில் தன் கருத்தை அடிகளாசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார். இதற்கு நெடிதான பட்டியலையும் காட்டியுள்ளார். அவை வருமாறு:

| | |
|---|---|
| குறளடி | 15 |
| சிந்தடி | 107 |
| அளவடி | 381 |
| நெடிலடி | 107 |
| கழிநெடிலடி | 15 |
| | 625 |

என்ற இவற்றின் பதினேழு நிலங்களும் உறழ இவ்வறுநூற்று இருபத்தைந்து அடிகளும் எழுபது வகைப்பட்டு பதின்மூன்றாயிரத்துத் தொண்ணூறு அடிகள் வரும் என்பதை நூற்று அறுபத்து ஏழு பட்டியல்களின் வழியே எடுத்துக் காட்டியுள்ளார்.

பேராசிரியரும், நச்சினார்க்கினியரும், யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பாக்களுக்கெனச் சீர் வரையறுத்துக் கொண்டு அவற்றைத் தம் மனம் போனவாறு கற்பனை செய்து கொண்டு உறழ்ந்து அடிகளை ஆக்கிக் கொள்கின்றனர். பேராசிரியர் ஆசிரியவடி 324 என்று கூற, விருத்தியுரையாசிரியர் 261 என்கின்றனர். கலியடி 120, 132 என்றும் மாறுபடுகின்றனர்.

'தொல்காப்பியர், இவர்கள் கருத்தின்படி அறுநூற்று இருபத்து ஐந்து அடிகளைக் கூறி இருக்க மாட்டார் என்பதே என் கருத்தாகும். ஏனெனில் எழுத்துக் கணக்குள்ள கட்டளையடிகளை இவ்வளவு சிக்கலாகவும், கருத்து வேறுபாடு உள்ளதாகவும் உறழ்ந்துணரும்படி - தெளிவற்ற வகையில், தெளிவுறக்கூறும் இயல்புடைய தொல்காப்பியர் கூறுவதற்கு நியாயமே இல்லை'[5] என்று தன் கருத்தை வலியுறுத்திக் கூறுகின்றார் அடிகளாசிரியர்.

இவர் கருத்தின்படி குறளடி3, சிந்தடி 3, அளவடி 5, நெடிலடி 3, கழிநெடிலடி 3 என்ற அளவில் பதினேழு நிலம் அமைகின்றது. இவைமுறையே இருபத்தைந்து விகற்பம், நூற்றிருபத்தைந்து விகற்பம், அளவடியில் அறுநூற்றிருபத்தைந்து கட்டளையடி என்றே அமையும்.

மேற்கூறிய யாவும் எழுத்தின் அடியாய் மட்டுமே அலகு பெறுகின்றன. அடியில் எழுத்தைக் கட்டளையாகக் கொண்ட அக்கால முறையை இன்றைய மாணாக்கர்கள் அறிந்து கொள்வது அத்துணை எளிதல்ல. எனவே தம்மால் இயன்றவரை அடிகளின் இயல்பை அடிகளாசிரியர் விளக்கிக் கூறியுள்ள தன்மை பாராட்டு பெறக்கூடியது.

## 1.5. முடிவுரை

அடிகளாசிரியரின் வாழ்வும் தொல்காப்பியப் பணிகளும் என்னும் முதல் இயலில் பெறப்பட்ட முடிவுகள் வருமாறு:

1. அடிகளாசிரியரின் இளமைக்காலம் வளமுடையதாக இல்லை. இருப்பினும் கடும் உழைப்பால் உயர்ந்தார். அவரின் இளமைக் கால வாழ்வு மாணவர்களுக்கு நல்ல படிப்பினையாகும்.

2. தன்னை ஆண்டவன் படைத்தது தமிழ்நூல்களைப் படைக்கத் தான் என்பது போல இவர் உரைநூல்கள், பதிப்பு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 64 நூல்களை உருவாக்கியுள்ளார்.

3. அடிகளாசிரியரின் இலக்கணப்பதிப்பு நூல்களை ஆறுவகை யாகக் கொள்ளலாம். அவ்வாறு வகைப்பதிப்புகளிலும் தொல் காப்பியத்தை மட்டும் அவரே பதிப்பித்துள்ளார் என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

4. தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொரு ளதிகாரத்தில் செய்யுளியல், செய்யுளியல் நீங்கலாக ஏனைய எட்டு இயல்கள், செய்யுளியல் ஆராய்ச்சி, ஐவகையடியும்

என்னும் நூற்பா விளக்கம் ஆகிய ஆறு பணிகளே அவரின் இலக்கணப் பதிப்புகளாகும். அந்த ஆறு பணிகளுள் முதல் மூன்றை மட்டும் விரிவாக அறிவோம்.

## சான்றெண் விளக்கம்

1. திருமந்திரம், செய்யுள் 81.
2. நேர்காணலில் கிடைத்த செய்தி.
3. திரு.அடிகளாசிரியர், பதிப்பு, தொல். எழுத்து. இளம்பூரணர் உரை, பதிப்புரை, 8.
4. தொல். பொருள். செய்யுளியல் நூற்பா. 48.
5. திரு. அடிகளாசிரியர், ஐவகையடியும் என்னும் தொல்காப் பிய நூற்பா விளக்கம். ப. 13.

[illegible]

[illegible]

## 1.5. முடிவுரை

அடிகளாசிரியரின் வாழ்வும் தொல்காப்பியப் பணிகளும் என்னும் முதல் இயலில் பெறப்பட்ட முடிவுகள் வருமாறு:

1. அடிகளாசிரியரின் இளமைக்காலம் வறுமையுடையதாக இருந்தது. இருப்பினும் கடும் உழைப்பால் உயர்ந்தார். அவரின் இளமைக் கால வாழ்வு மாணவர்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

2. தமிழை ஆண்டவன் படைத்தது தமிழ்நூல்களைப் படைக்கத் தான் என்பது போல இவர் உரைநூல்கள், பதிப்பு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 58 நூல்களை உருவாக்கியுள்ளார்.

3. அடிகளாசிரியரின் இலக்கணப்பதிப்பு நூல்களை ஆறுவகை யாகக் கொள்ளலாம். அவ்வாறு வகைப்பதிப்புகளிலும் தொல் காப்பியத்தை மட்டும் அவரே பதிப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

4. தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரத்தில் செய்யுளியல், செய்யுளியல் நீங்கலாக ஏனைய எட்டு இயல்கள், செய்யுளியல் ஆராய்ச்சி, நூற்பாவகையடியும்

இயல் : 2

# அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப்பிய எழுத்ததிகாரம்

## 2.0. முன்னுரை

அடிகளாசிரியர் பதிப்பித்துள்ள இலக்கணப் பதிப்பில் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பினை ஆராய இவ்வியல் முற்படுகின்றது. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பு வரலாற்றையும், பதிப்பு முறைகளையும், உரை உத்திகளையும், சுவடி - பாடவேறுபாடுகளையும், நயங் களையும், ஒப்பீடுகளையும், பிற குறிப்புகளையும் இவ்வியல் ஆராய்ந்துள்ளது. நிறைவாக அப்பதிப்பின் சிறப்புகளை அறிஞர் க்ண்கொண்டு விளக்கியுள்ளது.

## 2.1. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பு வரலாறு

பேராசிரியர் அடிகளாசிரியர் கரந்தைப் புலவர் கல்லூரி யில் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் தொல்காப்பிய எழுத் ததிகாரத்தினை இளம்பூரணர் உரையுடன் பதிப்பிக்க வேண்டும் என்று விருப்பம் கொண்டிருந்தார். துன்முகி யாண்டு சித்திரைத் திங்கள் 14ஆம் நாள் முதல் சார்வரியாண்டு மார்கழித் திங்கள் 28ஆம்

நாள் முடிய நான்கு ஆண்டுகாலம் அதற்கான ஆய்வுகளை மேற் கொண்டிருந்தார். இக்காலத்தில் ஓலைச்சுவடித் தொகுப்புகள், அச்சில் வந்துள்ள பதிப்புகள், இலக்கிய இலக்கண நூல்கள் ஆகியவற்றைத் தேடித் தொகுத்து வைத்துக் கொண்டு -தொல்காப் பிய எழுத்ததிகாரத்தை ஆய்வு செய்து செப்பமான படி ஒன்றினை எழுதி வைத்துக் கொண்டார்.'

நான்காண்டு காலமாக மிகவும் உழைத்துத் திருந்திய படியொன்றினை எழுதிவைத்து அதன்பின் அச்சிடும்பணியைத் தொடங்க எண்ணியிருந்தார். இதற்காகப் பொருள் வேண்டித் தமிழன்பர்கள், தமிழ்த்தொண்டர்கள், திருமடத்தலைவர்கள் தமிழறிஞர்கள் எனப் பல்வேறு நிலையில் உள்ளோரை அணுகி னார். பயனேதும் கிட்டவில்லை. ஓர் இரவலனைப் போன்று பிறரை அணுகி நின்றதற்காக மிகவும் நாணம் கொண்டார். இச் செய்தியை அவரே பின்வருமாறு கூறியுள்ளார்.

''இதனை அச்சிடுவதற்கு மிகுதியான பொருள் வேண்டி யிருந்தது. என்னிடம் அவ்வளவு பொருளில்லை. அதனால் இக் கருத்தினைப் பல அன்பரிடமும், சிறப்பாகச் சில தமிழ்த் தொண் டர்களிடமும் கூறினேன். சில திருமடத்தலைவரையும் அணு கினேன் - கூறியென்? அணுகியென்? அவரெல்லாம் எழுத்ததி காரம் அச்சிடுதலைத் தமிழ்மொழிக்குச் செய்யவேண்டிய ஆக்கத் தொண்டுள் ஒன்றென்று கருதவேயில்லை. அவர்களிடம் அணுகிய தற்கும் கூறியதற்கும் என் உள்ளம் மிகவும் நாணமடைந்தது; கவலையும் அடைந்தது; என்னாலும் அச்சிட முடியவில்லை. பிறருடைய துணையும் கிடைக்கவில்லை. இத்தகைய சூழ்நிலை யில், இறைவனை நோக்கி, இறைவனே! உன்னுடைய திருவருட் டுணை யேனும் எனக்குக் கிடைக்கவேண்டும்; அத்துணையால் தொல்காப்பியம் அச்சாக வேண்டும் என்று வேண்டிக் கொண்டு அச்சிடுவதற்கு எத்தகைய முயற்சியும் செய்யாமல் இருந்து விட்டேன்''.[1]

இத்தகைய சூழலில், இறைவன் திருவருளை நம்பிய நிலையில் அச்சிடும் பணியைத் தாமே மேற்கொண்டார். இராச பாளையம் மணிமேகலை மன்றத்தார் வழியாக உயர்திரு பூ.கு. குப்புசாமிராஜா என்பவர் தொல்காப்பியச் செய்யுளியல் -

இரு சூத்திர விளக்கக் கட்டுரைப் போட்டியொன்றை அறிவித்து, அதற்குப் பரிசுத்தொகை ரூபாய் ஆயிரம் என அறிவித்திருந்தார். இப்போட்டியில் கலந்து கொண்டு கட்டுரை எழுதி அதன் மூலம் ஆயிரம் பெற்று நூலை அச்சிடலாம் என அடிகளாசிரியர் எண்ணினார். மிக முயன்று கட்டுரை எழுதி அனுப்பினார். அடிகளாசிரியரின் கட்டுரை அப்போட்டியில் சிறந்த கட்டுரையாகக் கருதப் பட்டது. ஆயினும் அதில் சில ஐயப்பாடுகள் விளக்கம் பெற வில்லையென்பதால் அவர் கட்டுரைக்கு ஐந்நூறு ரூபாயும், ஏனைய ஐவர் கட்டுரைகட்கு ஒவ்வொருவர்க்கும் நூறு ரூபாயுமாக ஆயிரம் ரூபாயைப் பிரித்துக் கொடுத்தனர். இந்நிலை யில் பரிசுத் தொகையான ஐந்நூற்றை அடியாகக் கொண்டு அச்சிடும் பணியைத் தொடங்கினார்.

இந்நிலையில் அடிகளாசிரியரின் உறவினரும் தமிழாசிரியருமாகிய கீரம்பூர் மு. துரைசாமி ஐயர் அவர்கள் ரூபாய் ஐந்நூறைத் தற்காலிகக் கடனாகக் கொடுத்து உதவினார்கள். புலவர் கல்லூரியில் பயின்ற மாணவர் திரு. நா. முத்துசாமி அவர்கள் ஒருதொகையைக் கடனாகத் தந்து உதவினார்.

அடிகளாசிரியரின் நண்பராகிய மஞ்சக்கொல்லை உயர்திரு. ரா. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் வழிகாட்டுதலின் பேரில் கும்பகோணம் காவேரி கலர் அச்சகத்தில் அச்சகப்பணி நிகழ்ந்தது. 25.04.1968 இல் முன் பணத்தையும் கையெழுத்துப் பிரதியையும் அச்சகத்தாரிடம் கொடுத்து அச்சிடத் தொடங்கினார். நூலின் பரப்பாலும் (512 பக்கம்) அச்சகத்தார்களுக்குள்ள வேலை மிகுதியாலும் அச்சிட ஓராண்டிற்குமேல் ஆகிவிட்டது.

### 2.1.1. இரண்டு பெரியார்களின் நினைவுப் பதிப்பு

நான்கு ஆண்டுகள் உழைத்துத் திருந்திய படியொன்றினை எழுதி முடித்து அதன்பின் பொருளுக்காகப் பல ஆண்டுகள் காத்திருந்து ஓராண்டு அச்சுப் பணியாற்றி வெளியிடப்பட்ட இந்நூலை இரண்டு பெரியார்களின் நினைவாக அடிகளாசிரியர் தமிழுலகத்திற்கு வழங்கியுள்ளார். தாம் தமிழ்ப் பேராசிரியராக விளங்குவதற்கு அடித்தளம் அமைத்தவர்களாகிய திருக்கயிலாய பரம்பரை பொம்மபுரம் மயிலம் ஆதீனத்து 18 ஆம் பட்டம் தவத்திரு சிவஞான பாலைய சுவாமிகளின் நினைவாகவும், கரந்தைத் தமிழ்ச்

சங்கம் தமிழவேள் த.வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்களின் நினைவாகவும் நூலை வெளியிட்டுள்ளார்.

எழுத்ததிகார ஆராய்ச்சியைத் தொடங்கிய காலத்தி லிருந்து அதன் ஆராய்ச்சி நிலையைப் பலகாலம் கேட்டு ஊக்கப் படுத்திய பள்ளியகரம் பேரறிஞர் உயர்திரு. நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்களையும், அச்சுத்தாளை நன்கு திருத்தி உதவிய அன்பு மாணவராகிய பி. இராசலிங்கம் அவர்களையும் அடிகளாசிரியர் நினைவு கூர்ந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

## 2.2. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பு முறைகள்

அடிகளாசிரியர், 'தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை ' என்ற பெயரில் நூலைப் பதிப்பித்துள்ளார். இளம்பூரணர்உரை என்று கூறிவிட்டதனால் இளம்பூரணர் உரையை மட்டுமே கூறாது சுவடிகளிலும், பல்வேறு அச்சுப் பதிப்புகளிலும் உள்ள பிற உரைகாரர்களின் கருத்துகளையும், அவர்கள் தமக்குள் மாறுபட்டுக் கொள்ளும் இடங்களையும், இருக்கின்ற பாடம், இருக்க வேண்டிய பாடம் என்று பல்வகை யானும் ஆய்வு செய்து பதிப்பித்திருப்பதால் இது உரைநூலாக மட்டுமன்றி ஒரு சிறந்த ஆய்வு நூலாகவும் திகழ்கின்றது.

சுருக்கக் குறியீடுகள், பதிப்புரை, நூல்பதிப்பித்த வரலாறு, நன்றியறிதல், படையல், நூல்வரலாறு, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு என்ற நிரலில் நூலின் முகப்பினைக் கற்பவர் கருதும் வண்ணம் தொடுத்து அமைத்துள்ளார். எழுத்ததி காரப் பொருளை ஆய்வு முறையில் விளக்கி அதிற் காணப்பெறும் பகுப்புகளைத் தொகுத்து அறிமுகப் படுத்தியுள்ளார். ஆகப் பதிப்பு எழுந்த வரலாற்றையும், நூலின் வரலாற்றையும் அழகுற நாற்பத் தைந்து பக்க அளவில் தந்து விளக்கிய பின்பே நூலுள் நுழையுமாறு பதிப்பித்துள்ளார்.

இனி நூலுள் காணப்படும் அமைப்பு முறைகளை நோக்குவோம். நூற்பா, நுதலியபொருள், உரை, பிற உரைகாரர் கருத்து, இலக்கிய எடுத்துக்காட்டு, நூற்பாக் குறிப்பு, உரைக்

குறிப்பு, அடிக்குறிப்பு விளக்கம் என்ற தொடர் நிலையில் நூற்பா வின் பொருள் விளங்கும் வகையில் தம் பணியைத் திறம்பட நடத்திச் சென்றுள்ளார்.

இந்த விளக்கமுறை நிரலால் தாம் ஆய்வு செய்தவற்றைச் சொல்லிச் செல்லும் பாங்கு பதிப்பினை நிறைவுடைய பதிப்பாகக் காட்டுகின்றது. பதிப்பின் பக்க ஆக்கம் (Page alignment) உருவாக் கப்பட்டுள்ள அமைவினை நோக்கும் போழ்து அதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேரிய, கடின முயற்சி புலப்படுகின்றது. மாறு பட்ட ஐந்து வகையான புள்ளி அளவுகளில் எழுத்துகள் பயன் படுத்தப் பட்டுள்ளன. நூற்பா - உரை - குறிப்பு ஆகியன தெள்ளத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளதால் கற்பவரது உள்வாங்கும் திறன் எளிதில் அமைகின்றது.

முதனூல் (மூலம்) எள் முனையும் பிழைபடக் கூறப்படு தல் ஆகாது என்ற அடிகளாசிரியரின் முனைப்பானது சுவடி வேறுபாடு - பாடபேதம் - ஏற்ற பாடம் என்ற பகுப்பாய்வினால் புலப்படுகின்றது. பதிப்பாசிரியர் கருத்தாய்வுக்கு (விமர்சனத் திற்கு) உரியவர் ஆவார். தவறுகளுக்குத் தான் பொறுப்பல்ல என்று கூறித் தப்பிக்க இயலாது. ஆகவே கத்தி மீது நடப்பது போன்றே தன் பணியை நிறைவேற்ற வேண்டியவராகின்றார் என்று கருதும் அடிகளாசிரியர், ஒருவர் எழுதித் தந்ததை அப்படியே அச்சிட்டுத் தந்து 'பதிப்பாசிரியர்' என்று கூறிக் கொள்வதை ஒருபோதும் ஏற்பவரல்லர்.

எனவே பதிப்புமுறையின் நெறிகளை நன்கு உணர்ந்து நூலின் பயனை முழுவதும் கற்பவர் அடைய வேண்டும் என்ற நோக்கில் - ஐந்தாண்டுகாலம் உழைத்து - சிறு எழுத்துப் பிழையோ சிறு குறையோ இன்றி ஐந்நூற்றுப் பன்னிரண்டு பக்கங்கள் கொண்ட நூலைத் தொழில் நுட்பங்கள் குறைவான அக்காலத்தில் பதிப்பித்திருப்பது இறைவனின் அரிய திருவருளே துணைசெய்த தால்தான் என்று அடிகளாசிரியர் நம்புகின்றார்.

இப்பதிப்பிற்குக் கருவிகளாக ஓலைச் சுவடித் தொகுப்பு கள் 3, இலக்கியப் பதிப்புகள் 21, இலக்கண நூல்கள் 14, உரை

நூல்கள் 11, நிகண்டுகள் 3 ஆகியவற்றைக் கொண்டு குறிப்புகளைத் தந்துள்ளார்.

நூற்பா, உரை, உரைக்குறிப்பு ஆகியவற்றுக்கு முறையாக வரிசை எண் தரப்பட்டுள்ளது. அடைப்புக் குறி விளக்கங்கள் மாறுபட்டு விளங்குமிடத்து ஐந்து வகையான அடைப்புக்குறிக் குறியீடுகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

இந்நூற்பதிப்பின் சிறப்பாக இதனுள் அணிந்துரை ஏதும் காணப்படாததைக் குறிப்பிடலாம். தூக்கிப் பிடிக்கப்படும் ஒரு நூலுக்கே அணிந்துரையும் ஆய்வுரையும் வேண்டப்படுவதாய் அடிகளாசிரியர் கருதியிருக்கலாம். அல்லது அடிகளாசிரியரின் நூலுக்கு அணிந்துரை தர அந்நாளைய அறிஞர்கள் நாணியிருக்க லாம்!

இக்காலப் பதிப்பாசிரியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை ஒருங்கே தொகுத்து இப்பதிப்பின் வழியே அடிகளாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். பதிப்புமுறையின் இலக்கணங்களாக அவற்றைக் கொள்ளலாம்.

## 2.3. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பில் உரை உத்திகள்

அடிகளாசிரியர் எடுத்துக்கொண்ட பணி தொல்காப்பிய நூலுக்கு இளம்பூரணர் எழுதியுள்ள உரையைப் பதிப்பிப்பதாகும். அந்த அளவில் நேரடியாக இளம்பூரணர் உரையை மட்டும் பதிப்பித்திருக்கலாம். அதனால் அவரது பணியைக் குறை கூறுவாரும் இருக்க முடியாது. ஆனால், அடிகளாசிரியர் மூன்று ஓலைச்சுவடிகள், ஐம்பது அச்சுப் பதிப்பு நூல்கள் எனப் பல்வேறு நூல்களைத் திரட்டி அவற்றின் செய்திகளை உள்வாங்கி, கடின உழைப்பிற்குப்பின் பதிப்பித்துள்ளார். இவ்வாறு பதிப்பிக்க வேண்டிய சூழல்தான் என்ன என்பதை நோக்குவோம்.

அ. புதுவது புரியும் விழைவு.

ஆ. பிற பதிப்புகளில் இல்லாத உரைஉத்தியை வெளிப்படுத்துவது.

இ. உரை எளிதாக வேண்டும் என்ற பேரவா.

மேற்குறித்த மூன்று நிலைகளில் அவர்கூறும் செய்தி யானது எளிதில் புலப்பட வேண்டும், கற்றல் எளிதாக வேண்டும் என்ற பெரு விருப்பத்தினால்தான் அடிகளாசிரியர் கடின உழைப்பை மேற்கொண்டு அந்நூலைப் பதிப்பித்துள்ளார்.

யாப்பிற்கு என முப்பத்திரண்டு உத்திகளை இலக்கண நூல்கள் வரையறுத்துள்ளன. ஆனால் உரை உத்திக்கு அவ்வாறான வரையறை ஏதும் இல்லை. இருப்பினும் உரைகாரர்களின் உத்தி களில் ஞாபகங் கூறல் என்ற உத்தி பெரும்பான்மையும் கையாளப் படுகின்றது. அது என்னவெனில் மனத்து இறுத்தல் என்பதாம். இவ்வுத்தியை அடிகளாசிரியர் நன்கு கையாண்டுள்ளார். வாராத தனால் வந்தது முடித்தல், வருமொழி வரையாது கூறல், அறியா துடம்படல், தன்கோள்கூறல், பிறன்கோள்கூறல், நேர்ந்துடம் படல் ஆகியவை உரைகாரர்களின் உத்திகளாகும். இவ்வுத்திகளை அடிகளாசிரியர் தக்கவாறு தக்க இடத்தில் உணர்த்தியுள்ளார்.

மேற்கூறிய உத்திகளில் நேர்ந்துடம்படல் என்ற உத்தியை அடிகளாசிரியர் பெரும்பான்மையும் கையாண்டுள்ளார். உரை காரர்களின் கருத்துக்களைத் தொகுத்துக் கூறி, அவற்றின் உண்மை நிலை உணர்ந்த பின்னரே அக்கருத்துகளுக்கு உடன்படுகின்றார்.

அறியாது உடம்படல் என்ற உத்தியை அடிகளாசிரியர் இப்பதிப்பில் ஓரிடத்தும் கையாளவில்லை என்பதும் புலனா கின்றது.

வேண்டிய இடங்களில் மட்டும் தன்கோள் கூறல் உத்தியைக் கையாண்டுள்ளார். ஒழிந்த இடங்களில் பிறன்கோள் கூறி நேர்ந்துடம்படுகின்றார். சிற்சில இடங்களில் வாராததனால் வந்தது முடித்தல் உத்தியைக் காண முடிகின்றது. இதற்குச் சான்று 91 ஆம் நூற்பாக்குறிப்பாகும். தொல்காப்பியர் 89, 90, 91 என்னும் மூன்று நூற்பாக்களால் கூறியவற்றை நன்னூலார்,

கஙவுஞ் சஞவும் டணவும் முதலிடை
நுனிநா அண்ணம் உறமுறை வருமே[2]

என்னும் ஒரு நூற்பாவில் கூறியுள்ளார் எனத் தம் கருத்தைத் தன்கோள்கூறல் உத்தியாகக் கூறியுள்ளார்.

அடிகளாசிரியர் தம் பதிப்பில் பிறன்கோள்கூறி நேர்ந்துடம் படலைக் கூறியுள்ளார். இவ்வுத்தி பெரும்பான்மையும் காணப்படு கின்றது. இதற்குச் சான்றாக 236-ஆம் நூற்பாவிற்குரிய உரைக் குறிப்பைக் காணலாம்[3]. வாராததனால் வந்தது முடித்தல் உத்தியை 220 - ஆம் நூற்பாவிற்குச் சுவடி வேறுபாடாக அடிகளாசிரியர் குறித்தவற்றைக் காணலாம்[4]. ஞாபகம் கூறல் உத்தியை 214 - ஆம் நூற்பாவின் உரைக் குறிப்பில், இவ்வுத்தியை மயிலை நாதரும் எடுத்துக் காட்டியுள்ளார் என்று கூறியுள்ளதன் வழியே அடிகளா சிரியர் கையாண்டுள்ளார்.

இவ்வாறு தமது பதிப்பில் உரை உத்திகளைக் கையாண்டு அப்பதிப்பை அடிகளாசிரியர் பொலிவுபெறச் செய்துள்ளார்.

## 2.4. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பில் சுவடி - பாட வேறுபாடுகள்

முதல்நூலை ஓலைச்சுவடிகளிலிருந்து படியெடுப்போரை அக்காலத்தார், எழுத்துக்காரர் என்றும் படியெடுப்போர் என்றும் அழைத்தனர். இவர்கள் நன்கு கற்றவர்களே ஆயினும் விரைவு, காலநெருக்கம், கவனமின்மை ஆகியவற்றால் படிகளில் பிழைகள் ஏற்பட எழுதிவிடுவர். இக்காலம் போல் படியைத் திருத்துவது அக்காலத்தில் அரிய செயலாகும். எனவே, படியெடுப்போர் செய்த பிழைகள் பிழைகளாகவே நின்று விடும்.

உரைகாரர்கள் தங்கள் உரைக்கு ஏற்ப முதல்நூலில் ஆங்காங்கே சிறு மாற்றங்கள் செய்வதும் உண்டு. எனவே, ஒருநூல் அதனைப் படியெடுத்த சுவடிகளில் உள்ள மாற்றத்தைப் பொருத்து ஒவ்வொரு படியிலும் ஏதேனும் ஒரு வேறுபாட்டுடன் நிற்கும்.

ஆய்வாளர்கள் பலபடிகளை ஒப்புநோக்கும்போது அவ்வேறுபாடுகள் புலனாகும். இந்நிலையில் ஆய்வாளர்கள் தம்அறிவுத் திறத்தால் அவற்றைப் புலப்படுத்தி வேறுபாடுகளைக் களைந்து தக்கபாடம் கூறுவது வழக்கமாகும். இப்பணியை அடிகளாசிரியர் மிகச்சிறப்பாகச் செய்துள்ளார்.

அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பில் சுவடிகளிலும், அச்சுப் பதிப்புகளிலும் காணப்படும் பாட வேறுபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஓரெழுத்து மாறினாலும் நூற்பாவின் பொருளே மாறிவிடும் நிலையில் தக்கபாடம் தெரிந்தால்தான் முதல் நூலின் நோக்கம் தெரிய வரும். இத்தகுநிலையில் பலஇலக்கண இலக்கிய நூல்களையும் கற்றுத் தேர்ந்த அடிகளாசிரியர் சுவடிகளிலும், அச்சுப் பதிப்புகளிலும் உள்ள பாட வேறுபாடுகளை நுணுகி ஆய்ந்து குறிப்பிட்டுள்ளார்.

## 2.4.1. பாடவேறுபாட்டிற்குரிய படிகள் - பதிப்புகள்

அச்சு நூல்களில் உள்ளவற்றையே கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பாடஞ் சொல்லி வருகின்றனர். அவ்வாறு பாடஞ்சொல்லப் பயன்படுத்திய பதிப்புகளில் பிழைகள் மலிந்திருப்பதைக் கண்டு அடிகளாசிரியர் வருந்தினார். வருந்திய நிலையில் பிழைகளை நீக்கிச் செம்பதிப்பு ஒன்றை வெளியிட வேண்டுமென விரும்பினார்.

இதனை அவர், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரையினைக் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்க்குப் பலயாண்டுகட்கு முன்பு பாடஞ் சொல்லத் தொடங்கி அதனை ஆழ்ந்து படித்து வந்தேன். அப்பொழுது அதிற் பலபிழைகள் இருப்பது புலனாயிற்று. அவற்றைத் திருத்துவ தாயின் அதற்கு யான் உய்த்துணர்ந்த உணர்ச்சியேயன்றி, ஏட்டுச் சுவடி முதலிய கருவிகளின் துணையும் வேண்டும் என்று கருதினேன்' என்று தனது பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

அடிகளாசிரியர் கருவிநூல்கள் தேடும் பணியில் ஈடுபட்டார். திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகள் திருமடத்திலிருந்து இளம்பூரணர் உரை ஓலைச்சுவடிகளின் இரண்டு படிகளையும், தன்னிடமிருந்த ஓலைச்சுவடிப் படிஒன்றினையும் வைத்துக்

கொண்டு ஒப்பு நோக்கினார். இவையேயன்றிக் கல்லியப்ப முதலியார் பதிப்பு, வ.உ. சிதம்பரம் பிள்ளைபதிப்பு, சுப்புராயச் செட்டியார் பதிப்பு ஆகிய அச்சுப் பதிப்புகளையும் துணையாகக் கொண்டு பதிப்புப் பணியைத் தொடங்கினார்.

### 2.4.1.1. ஒருமை, பன்மை பாடவேறுபாடு

தொல்காப்பியர் எழுத்ததிகார நூன்மரபில் மெய்யின் வழிய உயிர்தோன்று நிலையே[6] என்ற நூற்பாவை இயற்றியுள்ளார். இந்நூற்பாவிற்கு உரை எழுதிய இளம்பூரணர் உயிர்கள் மெய்களின் பின்னவாம் எனப் பொருள் கொண்டு வழிய என்ற சொல்லைப் பன்மையாகப் பாடங் கொண்டுள்ளார். நச்சினார்க்கினியர் வழியது எனப்பாடங் கொண்டு ஒருமையாக உரை கூறியுள்ளார்.[7] இவ் விடத்தில் அடிகளாசிரியர் இளம்பூரணர் உரையைப் பின்பற்றி வழிய எனப் பன்மையாகப் பாடங் கொண்டுள்ளார்.

### 2.4.1.2. ளகாரத்திற்கு ணகாரம் இனமாதல்

எழுத்ததிகாரப் புள்ளிமயங்கியலில் ளகார இறுதி ணகாரம் இயற்றே[8] என்னும் நூற்பா இடம் பெற்றுள்ளது. இந்நூற்பாவிற்கு உரைகூறப்புகுந்த இளம்பூரணர் ''ளகார ஈற்றுப்பெயர், வேற் றுமைக்கண் ணகார ஈற்று இயல்பிற்றாய் வன்கணம் வந்தால், ளகாரம் டகாரமாய்த் திரிந்து முடியும் என்று எழுதியுள்ளார்.''

மேற்குறித்த இளம்பூரணர் உரைக்குப் பொருந்தாத நிலை உண்டு என்பதை உணர்ந்தார் அடிகளாசிரியர். அதனை அவர் நயம்பட உணர்த்த எண்ணிய நிலையில் கருத்தாகக் கூறாமல் தக்க யாகப்பரணி உரையாசிரியர் எழுதியுள்ள உரையை மேற்கோள் காட்டி நயமான உரையைத் தருகின்றார். அவ்வுரை வருமாறு:

''தக்கயாகப் பரணி உரையாசிரியர் கட்பெருங்கடல் குடித்தன தடித்தன கழுதே (395) என்னும் பகுதிக்குக் கட்கடல் முடிவுணர்க. ளகர விறுதி ணகர வியற்றே மெய் தடித்தல் விசேட மென உணர்க என்று நயமாக உரையெழுதியுள்ளார். இதனால் அவர் இந்நூற்பாவிற்குக் கொண்ட பாடவேறுபாட்டினை உணரலாம்.''[10]

தக்கயாகப் பரணி உரையாசிரியர் ளகாரம் டகாரமாய்த் திரிதலை விசேடம் (சிறப்பு) என்று கூறுகின்றார். இளம்பூரணர் உரையின்படி கள்ளைக் குடித்தான் - கட்குடித்தான் என்று வரும். ஆனால் அதுவே முள்தைத்தது என்ற சொற்றொடர் முட்தைத்தது என்று வாராது. இங்கும் முள்கண் தைத்தது என்ற வேற்றுமை வந்தது கண்டு கொள்க.

மேற்கண்டவற்றை நோக்குகின்ற பொழுது, அடிகளாசிரியர் இளம்பூரணர் உரையின் பொருந்தாத இடத்து, தன் மறுப்பைக் காட்டக் கட்பெருங்கடல் குடித்தன தடித்தன கழுதே என்னும் பகுதிக்கு ''கட்கடல் முடிவுணர்க'' ளகர இறுதி ணகர இயற்றே. மெய்தடித்தல் விசேடம் என உணர்க. என்னும் அரிய உரைக் குறிப்பைத் தந்து தனது மறுப்பினை மிகமென்மையாகக் காட்டியுள்ளார்.

### 1.4.1.3. பனம்பாரனாரும் ஞானியார் மடத்துச் சுவடியும்

'வடவேங்கடம்' எனத்தொடங்கும் சிறப்புப் பாயிரத்தை இயற்றிய பனம்பாரனாருக்கும், தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியருக்கும் உள்ள உறவை அடிகளாசிரியர் தம்பதிப்பில் குறித்துள்ளார். தன்னாசிரியர், தன்னோடு ஒருங்கு கற்ற மாணாக்கர்கள், தன் மாணாக்கர்ஆகிய இம்மூவரே பாயிரம் இயற்றும் தகுதியுடையோராவர். இம்மூவருள் பனம்பாரனார் தொல்காப்பியரின் ஆசிரியரா? தொல்காப்பியரோடு ஒருங்குகற்ற மாணவரா? தொல்காப்பியரின் மாணவரா?

மேற்கண்ட வினாக்களுக்குரிய விடையைப் பதிப்பாசிரியர் பலரும் கூறவில்லை. ஆனால், அடிகளாசிரியர் கடலூர் ஞானியார் மடத்துச் சுவடியைச் சான்றாகக் கொண்டு பனம்பாரனார் தொல்காப்பியரோடு ஒருங்கு கற்ற மாணவராவார் என்று கூறியுள்ளார். இதனை அவர் பாயிரம் செய்தார் தன்னோடொருங்குகற்ற பனம்பாரனார் என்றும் இச்சொற்றொடர் மட்டும் ஞானியார் மடத்துச் சுவடியில் காணப்படுகின்றது[11] என்றும் கூறியுள்ளார்.

அடிகளாசிரியர் பதிப்பில் மேற்கண்டவாறு பல அரிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவ்வரிய குறிப்பின் கருவூலங்களாகச் சுவடிகள் காணப்படுகின்றன. இதன்மூலம் சுவடிகளின்

மூலம் பதிப்பிக்கப்பெறும் பதிப்பே சிறப்பு பெறும் என்பதும் தெரிய வருகின்றது.

## 2.5. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பில் நயங்கள்

அடிகளாசிரியர் தாம்பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததி காரப் பதிப்பில் மிகவும் சுவைபட நயங்களை எடுத்துக் கூறியுள் ளார். அந்நயங்களை உணர மிகுந்த பயிற்சி வேண்டியதாகும். சான்றிற்குச் சில நயங்களை ஈண்டு நோக்குவோம்.

இளம்பூரணர் உரையைக் கருத்தில் வைத்துக் கொண்டு நன்னூலார் பல நூற்பாக்களைச் செய்துள்ளார் என்பது அடிகளா சிரியரின் கருத்தாகும். அக்கருத்தை அவர் உணர்த்தியவிதம் சிறந்த நயமாக உள்ளது. பிறப்பியலில் வரும்,

**அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்**
**நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்**
**தாம்இனிது பிறக்கும் தகார நகாரம்**[12]

என்னும் நூற்பாவிற்கு எழுதியுள்ள இளம்பூரணர் உரையை அடி யொற்றியே நன்னூலார் நூற்பா செய்துள்ளார் என்பது அடிகளா சிரியரின் கருத்தாகும். இக்கருத்தை இளம்பூரணர் உரையைக் கொண்டு நோக்குவோம். அவ்வுரை வருமாறு:

''அண்ணத்தைப் பொருந்தின பல்லினது அடியாகிய இடத்தின் கண்ணே நாவினுனி பரந்து வடிவை உறும்படி ஒற்றத் தாம் இனிதாகப் பிறக்கும் தகாரமும் நகாரமும்''[13]

மேற்கண்ட இளம்பூரணர் உரையைக் கருத்தில் கொண்ட நன்னூலார்

**''அண்பல் லடிநா முடியுறத் தநவரும்''**[14]

என்று நூற்பாவைப் படைத்துள்ளார். இவ்விடத்தில் இளம்பூரணர் உரையையும் நன்னூலார் நூற்பாவையும் அறிஞர்கள் கண்டுணர்ந்

தால், இளம்பூரணர் உரையை அடியொற்றியே நன்னூலார் நூற்பா செய்துள்ளார் எனக் கூறும் அடிகளாசிரியரின் கருத்து வலுப் பெறும். அடிகளாசிரியர் இளம்பூரணர் உரையையும் நன்னூலை யும் நன்கு படித்தவராகையால் இம்மாதிரியான நுட்பங்களைக் கூறியுள்ளார் எனக் கொள்ளலாம்.

தொல்காப்பியர், எழுத்ததிகார நூன்மரபில் 19,20, 21 ஆவது நூற்பாக்களில் வல்லெழுத்துகள், மெல்லெழுத்துகள், இடையெழுத்துகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இந்நூற்பா விற்கு விளக்கம் கூறவந்த அடிகளாசிரியர்,

''வல்லினம் கன்மேல் விரலிட்டாற்போலவும், மெல் லினம் மணன்மேல் விரலிட்டாற்போலவும், இடையினம் மண் மேல் விரலிட்டாற்போலவும் எனக் கொள்க''[15] என்று நேமிநாத உரையைக் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வுரையின் மூலம் அவர் கையாண்ட நயங்களை உணரமுடிகின்றது.

தொல்காப்பியர் பிறப்பியலில் ற, ன என்ற எழுத்துகள் பிறக்கும் முறையை,

''அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்''

என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூற்பாவில் வந்துள்ள 'அணரி' என்ற சொல்லிற்குப் பொருளெழுதிய இளம்பூரணர் அணரியை 'அண்ணம்' என்று குறித்துள்ளார். ஆனால் நச்சினார்க்கினியர், 'அணரி' என்பதற்கு மேனோக்கிச் சென்று என்று பொருள் கொண் டுள்ளார். இவ்விடத்தில் அடிகளாசிரியர் எழுதிய பின்வரும் உரைக் குறிப்பு நயத்தைக் காட்டுகின்றது.

அணரி என்பதற்கு மேனோக்கிச் சென்று என்று பொருள் காண்பர் நச்சினார்க்கினியர். அணரி வினையெச்சம்; ஒற்ற என்னும் எச்சவினையுடன் முடிந்தது என்பர். அணரி என்பது பெயர்ச் சொல்லாகவும் வரும். ஆண்டு அண்ணத்தை உணர்த்தும். அணரி அண்ணம் என்பது (5-315) பிங்கலம்[17].

அடிகளாசிரியரின் உரைக்குறிப்பின்மூலம் இளம்பூரணர் உரையும் வலுவடைகின்றது.

## 2.6. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பில் ஒப்பீடுகள்

அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பில் இலக்கண நூல்களையும், உரைநூல்களையும் கருவிகளாய்க் கையாண்டுள்ளார். எனவே பதிப்பு முழுவதும் அங்கிங்கெனாதவாறு எங்கணும் ஒப்பீடுகள் விரவிக் கிடக்கின்றன. இவ்வொப்பீடுகள் கூறியது கோடல், மாறுபடக்கூறல், நடுநிற்றல் என்ற மூவகையான் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

இலக்கண உரையாசிரியர் காலங்கள் தோறும் கருத்துகளைக் கூறி வந்துள்ளனர்; வருகின்றனர். ஒரு காலத்துக் கருத்து பிறிதொரு காலத்தில் கொள்ளப்படவும், மாறுபடவும், நடுநிலைப்படவும் நிற்றல் என்பது காலத்தால் காக்கப்படும் மரபாகும்.

இப்பதிப்பினில் அடிகளாசிரியர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், சங்கரநமச்சிவாயர், வ.உ.சிதம்பரம் பிள்ளை ஆகியோரது உரைகளையும், நன்னூல், இலக்கண விளக்கம், நேமிநாதம், வீரசோழியம் போன்ற இலக்கண நூல்களையும் ஒப்பீடு செய்துள்ளார்.

"அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே" [18]

என்ற நூற்பாவிற்குப் பெயர்களின் பின்னாகிய இடத்தின்கண்ணே சாரியை வரும். எ.கா. ஆடூஉவின்கை, மகடூஉவின்கை, பலவற்றுக் கோடு என இளம்பூரணர் உரையைக் கூறி நூற்பாவிற்கான குறிப்புரையில் மூவகையான (கூறியது கோடல், மாறுபடக்கூறல், நடுநிற்றல்) கருத்துகளையும் ஒப்பீடு செய்து காட்டியுள்ளார்.

'சாரியை : தொல்காப்பியர் மற்றோரிடத்தில் (இடையியல் நூற்பா-2) சாரியையினைப் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக் குதவுவன' என்று குறிப்பிட்டுள்ளார்.

நச்சினார்க்கினியர் இந்நூற்பாவுரையுள் சாரியை என்றதன் பொருள், வேறாகி நின்ற இருமொழியும் தம்மில் சார்தல் பொருட்டு இயைந்து நின்றது என்றனர்.

சேனாவரையர், புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுவதாவது எல்லாவற்றையும் என்புழி வற்றுச் சாரியை நிலைமொழிப் பொருள் அஃறிணைப் பொருள் என்பது படவருதலும் எல்லா நம்மையும் என்புழி நம்முச் சாரியை அப் பொருள் தன்மைப் பன்மை என்பது பட வருதலும் ஆகும். அல்லனவும் தாஞ்சார்ந்து வரும் மொழிப் பொருளுக்கு உபகார முடையவாய் ஓர்ந்து கொள்ளப்படும். அல்லாக்கால் சாரியை மொழியாகா என்பது என்றார். இதன்வழியே கூறியதுகோடல் பெறப்படும்.

அடியார்க்கு நல்லார் சாரியையாவது சொல் தொடர்ந்து செல்லும் நெறிக்கண் நின்று, அதற்குப் பற்றுக் கோடாகச் சிறிது பொருள் பயந்ததும், பயவாததுமாய் நிற்பது என்று நடுநிலையாய் நின்றார். நேமிநாதம் சாரியை இடைச்சொல் என்று தன்கோள் கூறு கின்றது. இலக்கண விளக்கம் சாரியை அன் ஆன் முதலாக எடுத் தோதப்பட்டு எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ச் சிறுபான்மை பொருள்நிலைக்கு உதவிச்செய்து இன்னொலியே பயனாக வருவது என்று உடம்பாட்டுடன் தன் கோள் கூறுகின்றது. மயிலை நாதர் சாரியையாவன அன் ஆன் முதலாக எடுத்தோதப்பட்டு எல்லாப் புணர்ச்சிக்கும் பொதுவாய்ப் பெரும்பாலும் இன்னொலியே பயனாக வருவன என்று மாறுபட்டுக் கூறுகின்றார்.[19]

இவ்வொப்பீட்டில் நச்சினார்க்கினியர் கூறியது கோடல் முறையில் சார்தல் பொருட்டு இயைந்து நிற்பது சாரியை என்றார்.

சேனாவரையரும் மொழிப்பொருளுக்கு உபகார முடையவை என்று கூறியது கொள்கின்றார்.

அடியார்க்குநல்லார் பொருள் பயந்தும் பயவாததுமாய் நிற்கும் என்று நடுநிலை நிற்கின்றார்.

நேமிநாதம் இடைச்சொல் என்று தன்கோள் கூறுகின்றது.

இலக்கண விளக்கம் பொருள்நிலைக்கு உதவி இன்னொலியே பயன் என்று கூறியது கொள்வதுடன் தன்கோளும் கூறுகின்றது.

மயிலைநாதர் இன்னொலியே பயன் என்று மாறுபட்டு கூறுகின்றார்.

ஆகக் கூறியது கோடல், நடுநிற்றல், மறுத்துக் கோடல் ஆகியவற்றுடன் தன் கோள் கூறுதற்கும் ஆகிய ஒப்புமை எடுத்துக் காட்டுகளைத் தந்து அடிகளாசிரியர் ஒப்பீடு ஆய்வு முறையை நிறைவாகத் தந்துள்ளார்.

## 2.7. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பில் பிற குறிப்புகள்

அடிகளாசிரியர் தம் உள்ளக் குறிப்புகளை நூற்பாக் குறிப்புகளாகவும், உரைக் குறிப்புகளாகவும் தந்துள்ள விடங்களில் சுவையான செய்திகளை வழங்குகின்றார். உரையாசிரியர் தங்களுக்குள் மாறுபட்டுக் கொள்வதையும் நகைச்சுவை ததும்பச் சிற்சில இடங்களில் எடுத்துக் கூறுகின்றார்.

எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வரும்வழி
அக்கி னிறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகர முற்றத் தோன்றாது.[20]

என்னும் நூற்பாவுக்கு எழுதியுள்ள குறிப்புரையில்

**இந்நூற்பாவை ஞாபகங் கூறல் என்னும்**
**உத்திக்கு இனமாகக் கொள்வர் பேராசிரியர்**
(தொல். பொரு.665)

பேராசிரியர் என்ன வகையினும் மனங்கோளின்மை வருமாறு இருதிணைப் பிரிந்த ஐம்பால் கிளவிக்கும் என்னும் சூத்திரத்திற்கும் எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வரும்வழி என்பதற்கும் வேறுபொருள் உரைப்பார். உரைக்குமாற்றான் அறியப்படும் (தொல் - பொரு - 663) என்பர்.

இதனால் இந்நூற்பாவிற்கு மனங்கொள்ளா உரை ஒன்று உண்டு போலும்! என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுகின்றார்[21].

அதே தொல் - பொரு - 665ஆம் நூற்பா உரையில் பேராசிரியர் அறியத் தோன்றிய நெறியில் என்ப என்ற 161ஆம் நூற்பாவை அறியாது உடம்படல் உத்திக்கு எடுத்துக் காட்டுகின்றார்.[22] அறியாது உடம் படல் என்பதும் பிறரை இடித்துக் காட்டுவதாகவே அமையும் போலும்.

மேலும் எழுத்ததிகாரம் 190-ஆவது நூற்பாக் குறிப்புரையில், இந்நூற்பாவை வாராததனான் வந்தது முடித்தல் என்ற உத்திக்கு மேற்கோள் காட்டினார் பேராசிரியர் அவர், எல்லா மென்னும்....தோன்றும் என்ற வழி, எல்லாம் என்னும் விரவுப் பெயருள் உயர்திணை கூறி அது வற்றுச் சாரியை பெறாமையான் - அச்சாரியை பெற்று வந்த அஃறிணைக் கூறே முடித்தலும் அது என்றனர் என்று எடுத்துக்காட்டி,

வாராதது எது?
வந்தது - எது?
முடித்தது - எதை?

என்பவைகளைப் பகுத்துப் பிரித்துக் காட்டி ஓர் உத்தியை விளக்கியுள்ளார். இதனால் ஓர் உத்தி நூலுட் பயின்று வரும் விதமும் அதை அறிந்திடும் நுட்பமும் பயில்வாருக்கு எளிதில் புலப்படும்.

இது போன்ற பல அரிய குறிப்புகள் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பு முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

473 - ஆம் நூற்பாவின் உரைக்குறிப்பில் தொல்காப்பியர் காலத்தில் கோடி என்னும் எண்ணுப் பெயர் வழங்கவில்லை என்ற கணிதக் குறிப்பினைத் தருகின்றார்.

307 ஆம்நூற்பாவின் உரைக் குறிப்பில் 'வெண்' என்பது தஞ்சைக்கு வடக்கேயுள்ள வெண்ணாறு போலும். தஞ்சை மாவட்டம் பாவநாசத்திலுள்ள முன்னியூர் அகத்தீசுவரர் கோயில் கல்வெட்டில் வெண்ணாறு குறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு

வெண்ணாற்றை 'வெண்ணு' என்றே குறிப்பிட்டுள்ளது என்ற புவியியல் குறிப்பினைத் தருகின்றார்.

காவிதி, ஏனாதி முதலான பட்டங்களைப் பெற்ற அதிகாரி கட்குப் பொற்பூவும், மோதிரமும், இறையிலி நிலமும் அளிப்பது பண்டை வழக்கம். எனவே காவிதிப்பட்டம் பெற்றவன் ஒருவன் எய்துவன காவிதிப்பூவும், காவிதி மோதிரமும் காவிதிப்புரவுமாம் என்ற சதாசிவப் பண்டாரத்தின் கூற்றினை எடுத்தாண்டு வரலாற்றுக் குறிப்பினைத் தருகின்றார்.

## 2.8. அடிகளாசிரியர் பதிப்பில் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பின் சிறப்புகள்

அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பின் சிறப்புகளை மூன்று அறிஞர்களின் சான்றுகளால் உணரலாம். பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை, பேராசிரியர் ஆபிரகாம்அருளப்பன், பேராசிரியர் தெ. ஞானசுந்தரம் ஆகியோரே அந்த அறிஞர்களாவர்.

### 2.8.1. பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை கூறிய சிறப்புகள்

பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்கள் தமிழாய்வு என்னும் இலக்கிய இதழில், தொல்காப்பியப் பதிப்புகள் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் அவர் கூறியுள்ள பின்வரும் கருத்துகள் அடிகளாசிரியரின் தொல்காப் பிய எழுத்ததிகாரப் பதிப்பின் சிறப்பைக் காட்டுவனவாக உள்ளன.

''இவர் ஏட்டுப் பிரதிகளுடன் ஒப்பு நோக்கி விளக்கக் குறிப்புகளுடன் அமைத்துத் தந்துள்ளார். எழுத்ததிகார இளம்பூரணர் உரைவெளியீட்டின் வளர்நிலையில் இவருடைய பதிப்பு சிறப்பாக அமைந்துள்ளமை காணலாம். நூற்பா அகரவரிசை, எடுத்துக்காட்டுகளின் அகராதி, உரைப்பொருள் அகரவரிசை என்னும் அகராதிகள் இப்பதிப்பின் சிறப்புக் கூறுகளாகும்''[24].

பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை சிறந்த அறிஞராவார். ஆதலால் அவரின் கருத்துப் படி எழுத்ததிகார இளம்பூரணர்உரை வெளியீட்டின் வளர்நிலையில் அடிகளாசிரியரின் பதிப்பு சிறந்த ஒன்றாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

### 2.8.2. பேராசிரியர் ஆபிரகாம் அருளப்பன் கூறிய சிறப்புகள்

தமிழ்ப் பெரும் புலவராகவும், தமிழ்ப் பேராசிரிய ராகவும் மதிக்கப்பெற்ற ஆபிரகாம் அருளப்பன் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையைச் சேர்ந்தவராவார். இவர் அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பைப் பாராட்டி மடல் எழுதியுள்ளார். அம்மடலில் கூறப் பெற்றுள்ள கருத்துகள் வருமாறு:

''பேரன்புசால் பெரியீர்

வணக்கம் மிக.

மற்று, தங்கள் தொல். எழுத்து இளம்பூரணர் உரை 1969 முதற் பதிப்பினையே 1970 முதலாக நான் வாங்கி வைத்து முறை யாகப் படித்து வருகின்றேன். அதுவே தொல்காப்பியப் பதிப்பு களிற் சிறந்தது என்பது என் கருத்து. அரிதின் முயன்று பதிப்பித் துள்ளீர்கள்.''[55]

மேற்குறித்த பேராசிரியர் ஆபிரகாம் அருளப்பனும் அடிகளாசிரியரின் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பை மிகச்சிறந்த முதல் பதிப்பாகக் கருதியுள்ளமை கருதத்தக்கது.

### 2.8.3. பேராசிரியர் தெ. ஞானசுந்தரம் கூறிய சிறப்புகள்

பேராசிரியர் முனைவர் தெ. ஞானசுந்தரம் அவர்கள், தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு - முதல் தொகுதி என்னும் நூலில் தொல்காப்பியப் பதிப்புகள் என்னும் தலைப்பில் தொல்காப்பிய ஆராய்ச்சி வரலாற்றைக் கூறியுள்ளார். அவர் அவ்வரலாற்றை ஐந்து அணியாகப் பிரித்து மூன்றாம் அணியில் அடிகளாசிரியரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அக்குறிப்புகள் வருமாறு :

அடிகளாசிரியரின் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரைப்பதிப்பும், பொருளதிகாரச் செய்யுளியல் இளம்பூரணர் உரைப்பதிப்பும் அரிய குறிப்புகள் பலவற்றைக் கொண்டன. கௌ, வெள எனக் ககர வகரங்களோடு சேர்ந்து மட்டுமே ஔகாரம் ஈறாகும் என்கிறது தொல்காப்பியம் (நூற்பா 70). இதன் நூற்பாக் குறிப்புரையில் நற்றிணையில் தௌ என்று கருதும்படி ஒரு சொல் வந்துள்ளது. கண்ணும் காட்சி தௌவின (நற். 397). அகராதி நிகண்டில் தௌவல் என்று ஒரு சொல் காணப்படுகின்றது. அதற்குக் கெடுதல் என்று பொருள் என்று எழுதியுள்ள குறிப்பு அரிய ஒன்று. இவ்வாறே குற்றியலுகரமும் அற்றென மொழிப என்னும் நூற்பாக் குறிப்பும் சிறப்பாக உள்ளது. அது வருமாறு: தொல்காப்பியர் குற்றியலுகரம் புள்ளிபெறும் என்று கூறுங் கருத்தினராயின் குற்றியலுகரமும் அற்றென மொழிப என்னும் இந்நூற்பாவினை நூன்மரபிலே, மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல், எகர வொகரத் தியற்கையுமற்றே (நூன் 15, 16) என்னும் நூற்பாக்களோடு வைத்திருப்பர். அவ்வாறு வைக்காமல் புணரியலிலே வைத்துள்ளதால் புணர்ச்சிக்குக் கருவி கூறியதாகவே கருதிக் குற்றியலுகர வீறும் மெய்யீறு போல உயிரேற இடங்கொடுக்கும் என்று கொள்வதே தக்கதாம்[26] என்று அடிகளாசிரியரின் சிறந்த நூற்பாக் குறிப்புகளைப் பற்றிப் பேசுகின்றார்.

மேலது குறிப்பில் உள்ள நூற்பாவிற்கு (70) இளம்பூரணர் உரையில் ககரம், வகரம் ஆகிய இரண்டு மட்டும் உதாரணமாகக் கொள்ளப்பட்டது. இவ்விடத்தில் அடிகளாசிரியர் தகரமும் மொழிக்கு ஈறாவதைச் சொல்லியுள்ளார். இளம்பூரணரே இரண்டுசான்றுதான் சொல்லியுள்ளார். ஏனைய பதிப்புகளிலும் இவ்வாறே உள்ளன. ஆனால் அடிகளாசிரியரோ வந்தது கொண்டு வாராதது உணர்த்தியுள்ளார். கொண்டது மட்டுமன்றிக் கொள்வது உரைப்பதும் உரையாசிரியரின் கடன் என்பதை அடிகளாசிரியர் நன்கு உணர்த்தியுள்ளார்.

மேற்கருத்தைத் தெ. ஞானசுந்தரம் அவர்கள் நமக்குணர்த்தி அதன்வழி அடிகளாசிரியரின் பதிப்புச் சிறப்பை உணர வைத்துள்ளார்.

மேற்குறித்த மூன்று பேராசிரியர்களின் சான்றுகளால் அடிகளாசிரியரின் பதிப்புச்சிறப்பை உணர்ந்தோம். கல்லூரி களிலும் பல்கலைக் கழகங்களிலும் தொல்காப்பிய எழுத்ததி காரத்தைப் பாடஞ் சொல்லும் பேராசிரியப் பெருமக்கள் பலர் என்னிடம் இப்பதிப்பைத் தோன்றாத் துணையாகக் கொண்டுள் ளோம் எனக் கூறியுள்ளனர். பாடஞ் சொல்வோரும், பாடங்கேட் போரும் தெளிவும் துணிபும் பெற இப்பதிப்பு அருந்துணை செய்கின்றது.

## 2.9. முடிவுரை

1. அடிகளாசிரியர் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பினைப் பதிப்பிக்க நான்காண்டுகாலம் கடும் உழைப்பை மேற்கொண்டிருந்தார். உழைப்போடு நில்லாமல் இறைவன் திருவருள் துணையையும் நாடி நின்று வெற்றி பெற்றுள்ளார்.

2. சுருக்கக் குறியீடுகள், பதிப்புரை, நூல் பதிப்பித்தவரலாறு, நன்றியறிதல், படையல், நூல் வரலாறு, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு என்ற நிரலில் நூலின் முகப்பினைக் கற்பவர் கருதும் வண்ணம் அமைத்துள்ளார்.

3. இப்பதிப்பிற்கு ஓலைச் சுவடித் தொகுப்புகள் 3, இலக்கியப் பதிப்புகள் 21, இலக்கண நூல்கள் 14, உரைநூல்கள் 11, நிகண்டுகள் 3 என்ற அளவில் கருவி நூல்களைப் பயன்படுத்தி யுள்ளார்.

4. அடிகளாசிரியர், பதிப்பு முறையின் நெறிகளை நன்குணர்ந்து சிறுஎழுத்துப் பிழையோ, குறையோ இன்றி நூலைப் பதிப்பித்துள்ளார். எனவே, இந்நூலைப் பதிப்பு முறையின் இலக்கணங்களாகக் கொள்ளலாம்.

5. ஞாபகங்கூறல், வாராததனால் வந்தது முடித்தல், வருமொழி வரையாது கூறல், அறியாதுடம்படல், தன் கோள் கூறல், பிறன்கோள் கூறல், நேர்ந்துடம்படல் ஆகிய உத்திகளை அடிகளாசிரியர் கையாண்டுள்ளார். இவ்வுத்திகளால் பதிப்பு சிறப்படைந்துள்ளது.

6. ஒருமை - பன்மை பாடவேறுபாடு, ளகாரத்திற்கு ணகாரம் இனமாதல், பனம்பாரனார் தொல்காப்பியரோடு ஒருங்கு கற்ற மாணாக்கர் ஆகிய கருத்துகளை நிறுவ அடிகளாசிரியர் சுவடிகளைப் பயன்படுத்தியுள்ளார். சுவடிப்பதிப்பால் இந்நூல் சிறப்படைந்துள்ளது.

7. இளம்பூரணர் உரையை அடியொற்றியே நன்னூலார் சில இடங்களில் நூற்பாக்களைச் செய்துள்ளார் என்பதை அடிகளா சிரியர் நன்கு உணர்த்தியுள்ளார்.

8. வல்லின, மெல்லின, இடையின எழுத்துகளுக்கு விளக்கம் கூறவந்த அடிகளாசிரியர் நேமிநாத உரையை எடுத்துக்காட்டி விளக்கியவிதம் அருமையானதாயுள்ளது.

9. இளம்பூரணர் உரையை வலுவாக்க அடிகளாசிரியர் எடுத்துக்காட்டும் சான்றுகள் படிப்பாருக்கு மேலும் விளக்க மாகின்றன.

10. அடிகளாசிரியர் பதிப்பு முழுதும் ஒப்பீடுகள் காணப்படுகின்றன. உரைநூல் என்பதைவிட ஒப்பீட்டு நூல் என்று சொல்லும் அளவிற்கு ஒப்பீடுகள் உள்ளன.

11. அடிகளாசிரியர் பதிப்பில் கணிதக் குறிப்புகளும், புவியியல் குறிப்புகளும், வரலாற்றுக் குறிப்புகளும் ஆங்காங்கே உள்ளன.

12. எழுத்ததிகார இளம்பூரணர் உரை வெளியீட்டு வளர் நிலையில் அடிகளாசிரியர் பதிப்பே சிறப்புடைத்து எனலாம்.

சான்றெண் விளக்கம்

1. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். எழுத்து. இளம்பூரணர் உரை, பதிப்புரை. பக். 8,9.
2. மேலது நூல், ப. 97.
3. மேலது நூல், ப. 225.
4. மேலது நூல், ப. 211
5. மேலது நூல், ப. 8

6. தொல். எழுத்து. நூன்மரபு, நூற்பா - 18.
7. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்), தொல். எழுத்து. இளம்பூரணர் உரை, ப.44.
8. தொல். எழுத்து. புள்ளிமயங்கியல், நூற்பா - 101.
9. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்), தொல். எழுத்து இளம்பூரணர் உரை, ப. 332.
10. மேலது நூல்.
11. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்), தொல். எழுத்து. இளம்பூரணர் உரை, சிறப்புப் பாயிரம், ப. 6.
12. தொல். எழுத்து. பிறப்பியல், நூற்பா - 11.
13. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்), தொல் - எழுத்து இளம்பூரணர் உரை, ப. 97.
14. நன்னூல் நூற்பா - 70.
15. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். எழுத்து இளம்பூரணர் உரை, ப. 45.
16. தொல். எழுத்து. பிறப்பியல், நூற்பா - 12.
17. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்), தொல். எழுத்து. இளம்பூரணர் உரை. ப. 98.
18. தொல். எழுத்து. புணரியல், நூற்பா - 16
19. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்), தொல். எழுத்து. இளம்பூரணர் உரை, பக். 120, 121.
20. தொல். எழுத்து. புணரியல், நூற்பா - 26.
21. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். எழுத்து. இளம்பூரணர் உரை, ப. 129.
22. மேலது நூல், ப. 163
23. மேலது நூல், ப. 183
24. மு. சண்முகம்பிள்ளை, சி. பாலசுப்பிரமணியம் (பொதுப் பதிப்பாசிரியர்) தொல்காப்பியப் பதிப்புகள், தமிழாய்வுத் தொகுதி 8, 1978, ப. 42.
25. ஆபிரகாம் அருளப்பன் எழுதிய மடல், நாள். 25.9.1986
26. தெ. ஞானசுந்தரம், தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு (முதல் தொகுதி) ப. 19.

2. மேலது நூல், ப. 97.
3. மேலது நூல், ப. 225.
4. மேலது நூல், ப. 211
5. மேலது நூல், ப. 6

இயல் : 3

# அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப்பியச் சொல்லதிகாரம்

## 3.0. முன்னுரை

அடிகளாசிரியர் பதிப்பித்த இலக்கணப்பதிப்பில் தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பினை ஆராய இவ்வியல் முற்படுகின்றது. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பு வரலாறு, பதிப்பு முறைகள், உரை உத்திகள், பாட வேறுபாடுகள், நயங்கள், ஒப்பீடுகள், பதிப்பின் சிறப்புகள் ஆகிய தலைப்புகளில் இவ்வியல் ஆராயப்பட்டுள்ளது.

## 3.1.அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பு வரலாறு

அடிகளாசிரியர் தாம் பதிப்பித்து வெளியிட்ட தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்புரையில், ''எழுத்ததிகார இளம்பூரணர் உரையினைப் பதிப்பித்தாற்போலவே, சொல்லதிகார இளம்பூரணர் உரையினை ..... பதிப்பிக்க வேண்டும் என்பது என் எண்ணமாகும். அவ்வெண்ணத்திற்கும் இறைவனுடைய

திருவருள்தான் துணை செய்ய வேண்டும்''[1] என்று குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பிய எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை பதிப்பிக்கப்பட்ட ஆண்டு 1969. தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூர்ணர் உரை பதிப்பிக்கப்பட்ட ஆண்டு 1988. அடிகளாசிரியரின் எண்ணம் திருவருள்துணையால் நிறைவேறப் பத்தொன்பது ஆண்டுகள் ஆயின.

அடிகளாசிரியர் தஞ்சாவூர் - கரந்தைப் புலவர் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராக இருந்தபோதே தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரையை அச்சிட்டது போன்று சொல்லதிகார இளம்பூரணர் உரையை அச்சிட விரும்பினார். ஆனால், அதற்குரிய சூழல்கள் உருவாகவில்லை. ஓய்வு பெற்றுப் பல ஆண்டுகள் கழித்து, தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்ற வாய்ப்பு கிட்டியவுடன் சொல்லதிகார இளம்பூரணர் உரையை ஆராய்ந்து அச்சிடும் பணியைத் தொடங்கினார். இச்செய்தியை அவரே பின்வருமாறு கூறியுள்ளார்.

''யான் தஞ்சாவூர் - கரந்தைப் புலவர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தபோது தமிழிலக்கண நூல்களை ஆழ்ந்து படித்து வந்தேன். அப்பொழுது அந்நூல்கள் பலவற்றில் பல பிழைகள் இருக்கக் கண்டேன். அப்பிழைகளில் சிலவற்றை எடுத்துக் காட்டி இலக்கண நூல்களில் காணப்படும் பிழைகள் என்று தலைப்பிட்டுத் தமிழ்ப் பொழில் என்னும் பத்திரிகையில் வேண்டுகோள் கட்டுரையொன்று எழுதினேன்.

அக்கட்டுரையில் தமிழுக்குக் கருவி நூல்களாகிய இலக்கண நூல்களே பிழையாக அச்சிடப் பெற்று வழங்கப் பெறுவதாயின் அது தமிழ் மொழிக்கு ஆக்கந்தராதென்றும், விரைவில் நாட்டிலுள்ள இலக்கண ஓலைச் சுவடிகளைத் தேடிப்பிடித்து அவற்றுடன் அச்சுப்பிரதிகளை வைத்து ஒப்பாய்வு செய்து இலக்கண நூல்களை அச்சிட்டுக் கொள்ள வேண்டுமென்றும், இந்த ஆய்வு வேலையில் தமிழ்ப் பேரறிஞரெல்லாரும் முழு மூச்சாக இறங்கிப் பணிபுரிய வேண்டுமென்றும் வேண்டுகோள்

விட்டிருந்தேன். இக்கட்டுரைப் பிரதிகள் பலவற்றைத் தமிழறிஞர் பலர்க்கு அனுப்பியிருந்தேன். தமிழறிஞர் எவரும் என் வேண்டு கோளைச் சிறிதளவும் கருதவில்லை.

தமிழ் மக்கள் செய்த தவப்பயனால் தஞ்சாவூரில் தமிழ்ப்பல்கலைக்கழகம் தோன்றிற்று. பல்கலைக் கழகத்தார் தொல்காப்பிய இளம்பூரணர் உரையை ஒப்பாய்வு செய்து நல்ல முறையில் பதிப்பிக்க வேண்டுமென்று கருதினர். அப்பணியை அவர்கள் அடியேனுக்கு அளித்தார்கள். எனக்கு இப்பணி செய்வ தில் அளவற்ற ஆர்வம் இருந்தது. முதன் முதல் தொல். செய்யுளியல் இளம்பூரணர் உரையை ஆராய்ந்து கொடுத்தேன். அதனை 1985-இல் அச்சிட்டு வெளியிட்டனர். செய்யுளியல் ஆராய்விற்குப் பின் தொல் - சொல்லதிகார இளம்பூரணர் உரையை ஆராயத் தொடங்கினேன்''.[2]

தமிழ்ப்பேரறிஞர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் அகத்திணையியல், புறத்திணையியல் இளம்பூரணர் உரையை அச்சிட்டார். பின்னர் அவரே 1924-இல் தொல்காப்பியச் சொல்லதிகாரம் இளம்பூரணர் உரையை வெளியிட்டார். முதன்முதலாகச் சொல்லதிகாரம் இளம்பூரணர் உரையை அச்சிட்டவர் நமச்சிவாய முதலியார் அவர்களே ஆவர். இவருக்குப் பின் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் 1961 - இல் சொல்லதிகாரம் இளம்பூரணர் உரையைப் பதிப்பிக்கும் செயலை எடுத்துக் கொண்டனர்.

திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு. ஞானியார் மடத்து ஓலைச் சுவடி ஒன்றனையும், திருவாவடுதுறை ஆதீனத்து ஓலைச்சுவடி ஒன்றனையும், இதுவரை அச்சுக்கு வந்த நூல்களையும் ஒப்புநோக்கி ஆய்வு செய்து தனது சொல்லதிகாரப் பதிப்புப் பணியைப் பதிப்பாசிரியர் நிறைவு செய்துள்ளார். இப்பதிப்புப் பணி தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 101 ஆவது வெளியீடாகத் தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை என்னும் பெயரில் 1988 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அன்னார் அகவை (73) முதிர்ந்து உடல்நலம் குன்றிய நிலையில் கடும் உழைப்பை மேற்கொண்டு இப்பதிப்பைப் பதிப்பித்துள்ளார் எனக் கூறுவது

முற்றிலும் சரியானதாகும். அத்துடன் அவருடைய பல ஆண்டு கால எண்ணம் இறைவன் திருவருளால் கைகூடிற்று என்றும் குறிப்பிடலாம்.

## 3.2. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பு முறைகள்

எழுத்ததிகாரப் பதிப்பினைப் போன்றே சொல்லதிகாரப் பதிப்பிலும் ஓலைச்சுவடிகள், அச்சுப்பிரதிகள் ஆகியவற்றோடு ஒப்பீடு செய்து சொல்லதிகாரப் பதிப்பினை அடிகளாசிரியர் செம்மையுறப் பதிப்பித்துள்ளார்.

ஒன்பது இலக்கண நூல்கள், ஏழு உரை நூல்கள், இருபது இலக்கிய நூல்கள், இரண்டு நிகண்டுகள், இரண்டு ஓலைச்சுவடிப் பிரதிகள் ஆகியவற்றை ஒன்று திரட்டி ஆய்வு செய்து பதிப்பு முறையில் செம்மை சேர்த்துள்ளார்.

நூற்பா, நுதலியபொருள், நூற்பாப்பதவுரை, எடுத்துக் காட்டு, நூற்பாக்குறிப்பு, உரைக்குறிப்பு, பாடவேறுபாடு, சுவடி வேறுபாடு, பிற இலக்கண ஆசிரியர் கருத்து, பிறஉரையாசிரியர் கருத்து - இவற்றில் தாம் சரியெனக் கண்ட கருத்து ஆகியவற்றை நூற்பாதோறும் அமைத்து விளக்கியுள்ளார். இத்தகைய பரந்து விரிந்த விளக்கங்களும், ஒப்பீடுகளும் கற்பாருக்கு மிகவும் எளிதில் புலப்படும் வண்ணம் உள்ளன.

இதனால் இலக்கணப் பயிற்சியை மாணவர்கள் ஆர்வமுடன் கற்க விரும்புகின்றனர். பல்வேறு கல்லூரிகளிலும் இப்பதிப்பே பாடஞ்சொல்லப் பயன்படுவது இதன் பதிப்பு முறைச்சிறப்பினால்தான் என்பது கண்கூடு.

நூலின் இறுதியில் உள்ள நூற்பா சொல்லகராதி, உரைப்பொருளகவு, உதாரண மேற்கோள் அகராதி, நூற்பா - முதற்குறிப்பகராதி ஆகியவை பதிப்பு முறையில் இந்நூல் சிறந்து விளங்கக் காரணங்களாகின்றன.

நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் என்ற தொடர் முறையில் மற்ற இருவரைவிடப் பதிப்பாசிரியரின் பொறுப்பு மிகப் பெரிதாகி உள்ளதை அடிகளாசிரியரின் பதிப்பு முறையிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

பிறநூல்கள், பிறஉரைகளை ஒப்பிட்டு அவற்றின் கருத்தும் தமது பதிப்பின் கருத்தும் வெளிப்படக் காட்டியுள்ள அடிகளாசிரியரின் பதிப்பு முறை சிறப்பான முறையாகத் தோன்றுகின்றது.

ஏனெனில் தொடக்க நிலையில் கற்க வருகின்ற ஒருவரிடம் ஒரு நூற்கருத்தையோ ஓர்உரையையோ மட்டுமே கூறி அவரைத் தெளிவித்திட இயலாது. பல நூலாசிரியர்களின் கருத்துகளும் கற்பவரை அடையும்போது அக்கருத்து அழுத்திச் சொல்லப்படுகின்ற தன்மையால் அவரிடம் தெளிவை ஏற்படுத்தும்.

இந்த அழுத்திக் கூறும் முறையில் அமைந்துள்ள அடிகளாசிரியரின் பதிப்பு கற்பவரிடம் எளிதில் தெளிவை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், இவருடைய பதிப்பில் எண்பதிற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் சுருக்க விளக்கங்கள் காணப்படுகின்றன. இவ்விளக்கங்கள் இவரின் புலமை அகலத்திற்குச் சான்றாகும்.

## 3.3 அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பில் உரைஉத்திகள்

அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணர் பதிப்பில் பல உத்திகள் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை அறிவோம். தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணர் உரை எக்காரணத்தினாலோ சில இடங்களில் சிதைந்துள்ளது. அவ்விடங்களில் எல்லாம் அடிகளாசிரியர் உரையை நிறைவு செய்து பதிப்பித்துள்ளார்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் ஏழாவது இயலாக இடம் பெற்றிருப்பது இடையியல் ஆகும். இவ்வியலின் முதல் நூற்பாவாகிய

7

**இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்**
**நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே**[3]

என்னும் நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையில்லை. ஓலைச் சுவடிகளிலும், பிறவற்றிலும் உரையின்றிக் காணப்படுவதைக் குறிப்பிடும் அடிகளாசிரியர் அரியதொரு உரைவிளக்கமும் தந்துள்ளார். எவ்வாறெனில் பிறஉரையாசிரியர்கள் பிறிதோர் இடத்தில் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்துக் கூறியுள்ளார்.

இங்கு ஒரு செய்தி கருதத்தக்கது. அடிகளாசிரியர் செய்ய வந்தது பதிப்புப் பணி; அதாவது சுவடிகளிலோ, அச்சுப் படிகளிலோ உள்ள இளம்பூரணர் உரையைப் பதிப்பிக்க வேண்டும். அவ்வாறு பதிப்பிக்கும் வேளையில் ஓரிடத்து ஒரு நூற்பாவிற்கு உரை காணப்படவில்லையெனில் பதிப்பாசிரியர் இந்நூற்பாவிற்கு உரை காணப்பட்டிலது என்று கூறிவிட்டு, அடுத்த நூற்பாவுக்குச் சென்று விடலாம்.

அடிகளாசிரியர் அவ்வாறு நழுவிவிடாமல் பிற நூல்களின் நூற்பாக்களையும் உரைகளையும் எடுத்துக் காட்டுடன் கூறி மேற்கண்ட நூற்பாவுக்கு உரைவிளக்கம் செய்கின்றார். இது வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்னும் உத்திக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. இவரது பணியான இளம்பூரணம் பதிப்பித்தலில் ஏற்படும் இடர்ப்பாடுள்ள இடங்களில் பிறர் உரையைத் தந்து வெற்றிடம் ஏற்படாமல் நிறைவு செய்துவிடும் அடிகளாசிரியரின் பரந்த மனப்பான்மை இதனால் புலப்படு கின்றது.

மேலும், மேலது நூற்பாக் குறிப்புரையில் யாப்பருங்கலம், வீரசோழியம், நன்னூல், மயிலைநாதர் உரை முதலான நூல்களிலிருந்து ஏழு கருத்துகளைக் குறிப்பிடுகின்றார்.[4] இது தொகுத்துச் சுட்டல் உத்திக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றது. தொல்காப்பியர் சொல்லதிகார இடையியலில் இடைச்சொல் வகையைப் பற்றி இரண்டாம் நூற்பாவில் கூறியுள்ளார். இடைச்சொற்கள் ஏழுவகையாக வரும் என்று குறிப்பிட்டுவிட்டு அதன் வகைகளைத் தொல்காப்பியர் அந்நூற்பாவில் குறிப்பிட் டுள்ளார். இவ்விடத்திற்கு விளக்கம் கூறவந்த அடிகளாசிரியர்

இடைச் சொல்பாகுபாடு என்னும் தலைப்பில் நேமிநாதத்தையும் நன்னூலாரையும் குறிப்பிட்டுள்ளார்.

நேமிநாத நூற்பா வருமாறு:

**சாரியையாய் ஒன்றல், உருபாதல், தங்குறிப்பின்**
**நேரும் பொருளாதல், நின்றசையாய்ப் - போர்தல்**
**வினைச் சொற் கிறாதல், இசைநிறைத்து மேவல்**
**அனைத்தே இடைச்சொல் அளவு**

(நேமிநாதம் சொல். 50)

நன்னூல் நூற்பா வருமாறு:

**வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்**
**தத்தம் பொருள இசைநிறை அசைநிலை**
**குறிப்புஎன் எண்பகுதி [6]** (நன்னூல் 420)

மேற்கண்டவாறு நேமிநாத நூற்பாவையும், நன்னூல் நூற்பாவையும் கூறி ஒப்பியல்போலி, ஒப்புருபுகள் என்பதனை வகுத்துக் கூறுகின்றார். இவை வகுத்துச்சுட்டல் உத்திக்கு எடுத்துக் காட்டாய் நிற்கின்றன.

தொல்காப்பியர் சொல்லதிகார எச்சவியலில் அன்மொழித் தொகை பற்றிக் குறிப்பிடும் பொழுது,

**பண்புதொக வரூஉம் கிளவியானும்**
**உம்மை தொக்க பெயர் வயினானும்**
**வேற்றுமை தொக்க பெயர் வயினானும்**
**ஈற்று நின்று இயலும் அன்மொழித் தொகையே. [7]**

என்ற நூற்பாவைப் படைத்துள்ளார். இதற்கு இளம்பூரணர் அக்கூறப்பட்ட மூன்று தொகைச் சொல்லீற்றுக் கண்ணே நின்று நடக்கும் அன்மொழித் தொகை என்றவாறு என்று சுருக்கமாக உரை கூறியுள்ளார்.[8]

இதனை விரித்து அடிகளாசிரியர் தம் உரைக்குறிப்பில் தரும் உரையாவது:

''பண்புத் தொகைப் புறத்துப் பிறந்தது வெள்ளாடை என்பது. அதனைப் படுத்தலோசையாற் சொல்ல வெண்மை மேலும் ஆடை மேலும் கிடவாது, அவ்வாடை உடுத்தான்மேற் கிடக்கும் என்பது. அந்நிறைமொழியோசையன்றிப் பிறிதோர் மொழியோசைபட்டுப் பொருள் கொள்ளுமாகலான் அம்மொழி அன்மொழியாயிற்று என்பது. அது அன்மொழித் தொகை ஆயக்காலும் வெளியது ஆடை என்றே விரியும், பிறிதில்லை (பண்புத் தொகையாக விரியும் என்பது கருத்து).

உம்மைத் தொகைபற்றிப் பிறந்தது தகர ஞாழல் என்பது அது விரியுங்கால் தகரமும் ஞாழலும் என விரியும். அன்னதன் தொகைக் கண் ஓசை வேறுபடச் சொல்லத் தகரத்தின் மேலும் ஞாழலின் மேலுங் கிடவாது அவை உடையான் மேல் நிற்கும். குறிப்பு : தகரமும் ஞாழலும் உறுப்பாகவுடைய சாற்று என்பர் மயிலை (நன்.368).

இனி, வேற்றுமைத் தொகை பற்றிப் பிறந்தது, பொற்றாலி என்பது. அது விரியுங்கால், பொன்னானாயதாலி பொற்றாலி என்றாம். பிறிதானும் விரியும். பின்னர் அத்தொகை பொன்மேலும் தாலிமேலும் கிடவாது பொற்றாலியுடையான் மேல் நிற்கும், ஓசை வேறுபாட்டான் என்பது.

(அன்மொழித்தொகை) இம்மூன்று தொகையும் பற்றிப் பிறத்தலின், ஓர் மிகுதி குறையில்லை ஒக்கும் என்றவாறு.

மற்றுத் தொகையதிகாரத்தின் முன் வைக்கப் பட்டதூஉம் சிறப்புடையதூஉம் வேற்றுமைத் தொகையாதலின், ஈண்டு இதனை முற்கூறாது, பண்புத் தொகையை முற்கூறிய தென்னை யெனின், அதனாற் பிறவும் உள கொள்ளப்படுவன - அவை யாவையோ வெனின் ஒழிந்து நின்ற உவமத்தொகை, வினைத் தொகை பற்றியும் பிறக்கும் அன்மொழித் தொகை என்பது.

உவமத் தொகை பற்றிப் பிறந்தது, அறற் கூந்தல் என்பது. அது விரியுங்கால் அறல் போலும் கூந்தல் என விரியும் (தொடர் விடுபட்டுள்ளது)

வினைத் தொகை பற்றித் தோன்றியது, திரிதாடி என்பது. அது விரியுங்கால் திரித்ததாடி என விரியும். அது தொக்குழித் திரிவின் மேலும் தாடி மேலும் கிடவாது திரித்ததாடியுடையான் மேல் நிற்கும்.''[9]

சுருங்கக் கூறி விளங்க வைத்தல் உத்தியை இளம்பூரணர் கடைப்பிடிக்க, அடிகளாசிரியர் தம் குறிப்புரையில், விரித்துக் கூறல் அல்லது அகலங்கூறல் உரை உத்தியைக் கையாண்டு அன்மொழித் தொகையை விளக்கியுள்ளார்.

## 3.4. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பில் பாடவேறுபாடுகள்

அடிகளாசிரியர் அவர்கள் தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பைப் பதிப்பிக்கப் பின்வரும் இரண்டு ஓலைச் சுவடிகளைக் கையாண்டுள்ளார்.

1. திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு. ஞானியார் மடத்து ஓலைச்சுவடி.

2. திருவாவடுதுறை ஆதீனத்து ஓலைச்சுவடி.

ஆதலால், பாடவேறுபாடுகளை மேற்குறித்த இரண்டு சுவடிகளைக் கொண்டே அறிவோம்.

தொல்காப்பியச் சொல்லதிகார இயல்களில் சிலவற்றின் பெயர்களை அடிகளாசிரியர் அவர்கள் சுவடிகளைச் சான்றாகக் கொண்டே திருத்தம் செய்துள்ளார். பெரும்பாலான அச்சுப்பிரதிகளில் ஏழாவதாக, எட்டாவதாகவுள்ள இயல்களின் பெயர்கள் இடையியல், உரியியல் என்றும் காணப்படுகின்றது. ஆனால் அடிகளாசிரியர் அவ்வியல்களின் பெயர்களை இடைச் சொல்லியல் என்றும், உரிச்சொல்லியல் என்றும் குறிப்பிட்டுப் பதிப்பித்துள்ளார். இச்செய்தியை அவரே குறிப்பு என்ற தலைப்பின் கீழ் விளக்கியுள்ளார்.

''இளம்பூரணர் உரை எழுதியுள்ள புலிசை ஏட்டில் பெயரியல், வினையியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் என்று இவ்வியல்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. நேமி நாதம் சிறிது மாறுபட்டுப் பெயர் மரபு, வினை மரபு, இடைச்சொன் மரபு, உரிச்சொன் மரபு என்று இயல்களுக்குப் பெயர் கூறும்.

இளம்பூரணர் உரையுள்ள துறைசை ஏட்டில் இடையியல் உரியியல் என்றே இயல்களின் பெயர் எழுதப்பட்டுள்ளது. ஏனைய தொல்காப்பிய உரையாசிரியர் எல்லோரும் இவ்வாறே கூறுகின்றனர். நன்னூல் உரையாசிரியராகிய சங்கர நமச்சிவாயர் இடையியல், உரியியல் என்றே பெயர் கூறுகின்றார்.[10]

மேற்கூறிய விளக்கங்களை அவரே குறிப்பிட்டு இவ்வாறு எழுதுவதற்குரிய காரணம் ஆராயத்தக்கது[11] என்று குறிப்பிட் டுள்ளார்.

இவ்வாறு இயல்களின் பெயர் மாற்றங்களை வேறு எந்தப் பதிப்பாசிரியரும் குறிப்பிடவில்லை என்பதும் கருதத்தக்கது.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தைப் பதிப்பித்த பல பதிப்பாசிரியர்கள் இடைச் சொல்லியலில் உள்ள பின்வரும் நூற்பாவை எல்லே இலக்கம் என்றுதான் பதிப்பித்துள்ளார்கள். ஆனால் அடிகளாசிரியர் மட்டும் அந்நூற்பாவை எல்லே விளக்கம் என்று பதிப்பித்துள்ளார். இதற்கு அவர் நூற்பாப் பாட ஆய்வு என்னும் தலைப்பில் கூறிய விளக்கம் வருமாறு:

''இளம்பூரணர் தொல் - செய்யுளியல் 206-ஆம் நூற்பா உரையில் இந்நூற்பா எல்லே இலக்கம் என்ற பாடத்துடன் உள்ளது. சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் என்னும் இவரெல்லோரும் எல்லே இலக்கம் என்று பாடங் கொண்டனர். விளக்கம் என்பதும் இலக்கம் என்பதும் உரிச்சொற் பொருளா யிருத்தலின் எல்லே விளக்கம் என்று பாடம் இருக்கலாமோ என்று அறிஞர் கருதுகின்றனர்''.

குறிப்பு : எல்லே விளக்கம் (இடை.21)
கொல்லேயையம் (இடை. 20)

என்னும் இவை தொல்லைப் பொருளிற்கு வேறன்று என்றும் கூறினார் என்பர். (இல.கொ.பா.6. உரை)

அடிகளாசிரியர் கொண்ட பாடத்தின்படி எல் ஏகாரம் பெற்றுப் பெண்பால் விளிச்சொல்லாகவும் ஆகாரம் பெற்று ஆண்பால் விளிச் சொல்லாகவும் ஈர் பெற்றுப் பலர்பால் விளிச்சொல்லாகவும் நிற்கும் எனக் கருதலாம்.

தொல்காப்பியர் வேற்றுமையியலில்,

**அவைதாம்**
**பெயரே**
**ஐயொடு குஇன் அதுகண் விளியீற்ற**[13]

என்றொரு நூற்பாவைக் கூறியுள்ளார். இந்நூற்பாவிற்கு அடிகளாசிரியர் தரும் பாடக் குறிப்பு சிறப்புடைத்து.

புலிசை ஏட்டிலும், துறைசை ஏட்டிலும்
மேற்கண்டவாறு நூற்பா அமைப்பும்
பாடமும் உள்ளன. சேனாவரையர்
நச்சினார்க்கினியர் தெய்வச்சிலையார்
கல்லாடனார் உரைப்பதிப்புகளில்

**அவைதாம்**
**பெயர் ஐ ஒடுகு**
**இன்அது கண்விளி யென்னு மீற்ற**

என்ற அமைப்பும், பாடமும் உள்ளன. இளம்பூரணர் என்னும் என்கின்ற சொல்லை வைத்து உரை எழுதவில்லை. சேனாவரையர் அச்சொல்லை வைத்து உரை எழுதுகின்றார். நன்னூலாசிரியரும் ஏட்டிலுள்ள பாடம் போல், பெயரே என்று எழுவாய் வேற்றுமையை ஏகாரம் கொடுத்துப் பிரித்தே கூறுகிறார். சேனாவரையர் நூற்பாப் பாடம் போலவே இளம்பூரணர் உரையுள் நூற்பாப் பாடத்தை எழுதுவோர் திருத்திவிட்டனர்.[14] என்று அடிகளாசிரியர் குறிப்பிடுகின்றார்.

## 3.5. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பில் நயங்கள்

அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரம் 510 பக்கங்களை (456 நூற்பாக்கள்) உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு பக்கந்தோறும் நயம் காணப்படுகின்றது. நுதலிய பொருள், இளம்பூரணர் உரை, ஏனைய உரையாசிரியர்களின் உரை, ஏனைய இலக்கண இலக்கிய எடுத்துக் காட்டு, குறிப்புரை முதலானவற்றைக் கூறி விளங்கவைக்கும் திறனால் இப்பதிப்பை அரிய நயங்கள் கொண்ட பதிப்பாகக் கொள்ளலாம். சான்றிற்குச் சில நயத்தை அறிவோம்.

### சொல்லதிகாரத்தின் முதல் நூற்பா

**உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே**
**ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே** [15]

என்பதாகும். இம்மூன்றடி நூற்பாவிற்கு அடிகளாசிரியர் பதினான்கு பக்கங்களில் விளக்கக் குறிப்புகளைத் தந்துள்ளார். அவ்விளக்கக் குறிப்புகளில் கூறிய கருத்துகளை அரிய நயங்களாகக் கொள்ளலாம்.

‘சொல்லின் எட்டுவகைப்பட்ட இலக்கணங்களாகிய இரண்டுதிணை, ஐந்துபால், எழுவகைவழு, எட்டு வேற்றுமை, ஆறு ஒட்டு, மூன்று இடம், மூன்று காலம், இரண்டு இடம் ஆகியன குறித்து விளக்கும் போது நயங்களை உணராமல் இருக்க இயலாது. எட்டு வகைப்பட்ட சொல்லிலக்கணப் பாகுபாட்டினை நேமிநாதமும் வீரசோழிய உரையும் கூறுகின்றன என்ற கருத்தை அடிகளாசிரியர் அழகிய நயத்துடன் குறிப்பிட்டுள்ளார். எட்டு வகைப்பட்ட சொல்லிலக்கணப் பாகுபாட்டினை நேமிநாதம்,

**ஏற்ற திணையிரண்டும் பாலைந்தும் ஏழ்வழுவும்**
**வேற்றுமை யெட்டும் தொகையாறும் - மாற்றறிய**
**மூன்றிடமுங் காலங்கண் மூன்றும் இரண்டிடத்தால்**
**தோன்ற வுரைப்பதாஞ் சொல்** [16] (நேமி - சொல் - 1)

என்றவாறு குறித்துள்ளது. வீரசோழியம் கிரியாபதப் படலத்தின் ஈற்றில் இவற்றால் சொல் ஆராயப்படும் என்ற தலைப்பில்

**வேற்றுமை யெட்டுந் திணையிரண்டும் பாலைந்தும்**
**மாற்றுதற் கொத்த வழுவேழும் - ஆறொட்டும்**
**ஏற்றமுக் கால மிடமூன் றிரண்டிடத்தால்**
**தோற்ற வுரைப்பதாஞ் சொல்** [17]

என்றவாறு குறித்துள்ளது. இவ்விரண்டு வெண்பாக்களை எடுத்துக் காட்டிய அடிகளாசிரியர் வீரசோழிய உரை வெண்பாவில் இடம் பெற்றுள்ள ஆறொட்டும் என்ற தொடர் இளம்பூரணர் உரையில் ஆறு ஒட்டு வகுத்து என்ற பாடபேதத்துடன் இளம்பூரணச் சுவடியில் காணப்படுகின்றது. அறுவகை ஒட்டும் என்பது அச்சுப் புத்தகப் பாடபேதமாகும்[18] என்று விளக்கிக் கூறிய நயம் பாராட்டத் தக்கதாகும்.

உயர்திணை அஃறிணை என்னும் சொல் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ''இலக்கண நூல்களில் உயர்திணை அஃறிணை என்னும் சொல் மிகுதியாகப் பயின்று வந்துள்ளது. ஆனால், இலக்கியங்களில் அவ்வாறு வரவில்லை. உயர்திணை என்னுஞ்சொல் குறுந் தொகையினும் (224-5) பட்டினப் பாலையிலும் (263) வந்துள்ளது. அஃறிணை என்னும் சொல் வந்திருப்பதாகத் தெரியவில்லை''[19] என்று அடிகளாசிரியர் குறிப்பெழுதி அதன்மூலம் உயர்திணை, அஃறிணைச் சொற்கள் இலக்கண நூல்களில் பயின்ற அளவு இலக்கிய நூல்களில் பயிலப்பெறவில்லை என்ற நயத்தை உணர்த்தியுள்ளார்.

அடிகளாசிரியர், சொல்லதிகாரம் என்னும் சொல்லிற்கு ஒன்பது குறிப்புகளை எழுதி விளக்கியுள்ளார். இளம்பூரணர், மயிலைநாதர், நேமிநாதர், சங்கரநமச்சிவாயர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார் முதலானவர்களின் கருத்துகளை ஒருங்கே திரட்டி விளக்கியுள்ளார். இவ்வாறு விளக்கிவிட்டு இறுதியில் இளம்பூரணர் முதலியோர் சொல்லதிகாரம் என்பதற்குக் கூறும் பொருள் தெளிவாக உள்ளது[20] என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கூறும் முறையில்தான் நயங்களை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

உயர்திணை என்ற சொல்லிற்கு உரையாசிரியர்கள் கூறிய விளக்கத்தை ஒன்றன்பின் ஒன்றாகக் குறிப்பிட்ட அடிகளாசிரியர் இறுதியில் அச்சொல்லிற்குரிய சரியான பொருளையும் குறிப்பிட்டுள்ளார். அதன் விளக்கம் வருமாறு:

| | | |
|---|---|---|
| சேனாவரையர் | - | மக்கட்சாதி |
| நச்சினார்க்கினியர் | - | உயர்ந்த ஒழுக்கம் |
| தெய்வச்சிலையார் | - | உயர்தல் என்பது மிகுதி திணை என்பது பொருள். |
| கல்லாடனார் | - | உயர்திணை என்பது இறந்த கால வினைத் தொகை |
| மயிலை நாதர் | - | உயர் என்பது மிகுதி; திணை என்பது பொருள். |
| சங்கர நமச்சிவாயர் | - | திணை என்பது பல பொருள் குறித்த ஒருசொல். ஈண்டுக் குலத்தினை உணர்த்துகின்றது. |

மேற்கூறியவாறு விள்க்கங்களைக் கூறிய அடிகளாசிரியர் இறுதியில், திணை என்னும் சொல்லிற்கு உரையாசிரியர்களால் சாதி, ஒழுக்கம், குலம், பொருள் என வெவ்வேறு பொருள் கூறப் பட்டிருப்பினும் அதற்குப் பொருள் என்னும் பொருளே தக்கதாம்[21] என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறியவற்றை நோக்குகின்ற பொழுது திணைக்குப் 'பொருள்' என்னும் பொருளே தக்கதாம் என்ற குறிப்பை அடிகளாசிரியர் கூறிய விதத்தால் உணர முடிகிறது. இவ்விடத்தில் இதற்குச் சான்றாக அடிகளாசிரியர் பிறிதோரிடத்தில் கூறிய குறிப்பு அரிய நயமாகும். அதனை ஈண்டு அறிவோம். சொல்லதிகாரத்தில் கிளவியாக்கத்தில்,

பால் மயக்குற்ற ஐயக்கிளவி
தான் அறிபொருள்வயின் பன்மை கூறல்[22]

என்னும் நூற்பா உள்ளது. இந்நூற்பாவில் வந்துள்ள தான் அறி பொருள் என்னும் தொடருக்கு அடிகளாசிரியர் கூறிய விளக்கம் வருமாறு:

''தான்அறிபொருள் என்றது தான் அறிந்த திணையாகிய பொருள் என்று பொருள் தருதலால் திணை என்னும் சொல்லிற்குப் பொருள் என்று பொருளிருத்தலை உணர்க. எனவே உயர்திணை என்னும் சொற்கு உயர் என்பது மிகுதி, திணை என்பது பொருள் என்று மயிலைநாதர் கூறும் உரைப்பொருளைக் கருதியுணர்க''[23] (நன். 208).

முதல் நூற்பாவில் உயர்திணை என்பதற்குக் கூறிய விளக்கத்தை 23ஆம் நூற்பாவிற்கு எடுத்துக்காட்டிக் குறிப்பெழுதிய நயம் மிகவும் போற்றத்தக்கதாய் உள்ளது.

## 3.6. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பில் ஒப்பீடுகள்

அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பு முழுவதும் அங்கிங்கெனாதவாறு ஒப்பீடுகள் காணப்படுகின்றன. அடிகளாசிரியர் இளம்பூரணர் உரையோடு சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், மயிலைநாதர், யாப்பருங்கல விருத்திக்காரர், சங்கரநமச்சிவாயர் ஆகியோரின் உரைகளையும் ஒப்பீடு செய்து உரைக் குறிப்புகளைத் தந்துள்ளார். தொல்காப்பியர் சொல்லதிகார வினையியலில்

**செயப்படு பொருளைச் செய்தது போலத்**
**தொழிற் படக் கிளத்தலும் வழக்கியல் என்ப.**[24]

என்னும் நூற்பாவினைப் படைத்துள்ளார். இந்நூற்பாவிற்கு அடிகளாசிரியர் எழுதிய பின்வரும் குறிப்பு ஒப்பீட்டிற்குச் சிறந்த சான்றாகும்.

1. இத்தொல் நூற்பாவினை நன்னூலாசிரியர் (நன்.399) தம் நூலுள் எடுத்தமைத்துக் கொண்டுள்ளார்.

2. இந்நூற்பாவிற்கு வேண்டும் விளக்கத்தை இறையனார் களவியல் 18-ஆம் நூற்பாவில் அறியக் கிளந்த இடம் என்பதற்குக் கூறியுள்ள விளக்கவுரையிற் காண்க.

3. இளம்பூரணர் எழுதும் உரை, வினைக்கண் செய்கை யீறாச் செயப்பட்ட பொருளை என்று உள்ளது. செய்கை யீறா என்றால் பொருள் விளங்கவில்லை; செய்கை உறச் செயப்பட்ட பொருளை என்று பாடங் கொள்ளின் பொருந்தும்; ஏடுகளில் இப்பாடம் கிடைக்கவில்லை.

4. இந்நூற்பாவிற்குச் சங்கர நமச்சிவாயர் கூறும் உரை நன்றாக உள்ளது. அதனை ஆண்டுக் காண்க.[25]

மேலது குறிப்பில் ''சங்கர நமச்சிவாயர் கூறும் உரை நன்றாக உள்ளது. அதனை ஆண்டுக் காண்க'' என்று கூறிக் கற்பாரின் ஆவலை அடிகளாசிரியர் தூண்டி விடுகின்றார்.

தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பில்,

**நிகழூஉ நின்ற பால்வரை கிளவி**
**உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே**
**அன்ன மரபின் வினைவயி னான**[26]

என்னும் நூற்பா இடம் பெற்றுள்ளது. இந்நூற்பா விற்கு ஒப்பீடாக அடிகளாசிரியர்,

**ஏய்ந்தநிகழ் காலத் தியல் வினையால் - வாய்ந்த**
**உயர்திணைப் பாலொருமை தோன்றும்**
**விரவுப்பேர் இயலும் வழக்கி னிடத்தென்றும் சொல்.**[27]

என்று நேமிநாத வெண்பாவைக் கூறி இதனை மேற்குறித்த தொல்காப்பிய நூற்பாவுடன் ஒப்பிடுக என்று கற்பாரையே ஒப்பிட்டுப் பார்த்து முடிவு தெரிந்து கொள்ளப் பணிக்கின்றார்.

மேலும் மேலது தொல்காப்பிய நூற்பாவிற்கு இளம் பூரணர் சாத்தன்யாழ்எழூஉம் என்ற சான்றைக் காட்டியுள்ளார். இதற்குக் குறிப்புரையாக, ''யாழ்வாசித்தல் பண்டு ஆண்கள்

தொழில். யாழ் வாசித்தலை எழூஉதல் என்பர். வினையெச்சப் பொருளில் எழீஇ என்று வரும். (இறை.கள.உரை)''[28] என்று அடிகளாசிரியர் குறிப்பிட்டுள்ளார் இதன் குறிப்பிலும் ஒப்பீட்டு உத்தி உள்ளது.

தொல்காப்பியர் விளி மரபில்,

**''அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்**
**அம்முறைப் பெயரோடு சிவணா தாயினும்**
**விளியொடு கொள்ப தெளியு மாறே''[29]**

என்னும் நூற்பா இடம் பெற்றுள்ளது. இந்நூற்பாவிற்கு ஒப்பீடாக அடிகளாசிரியர் தொல். சொல். இடைச் சொல்லியலில் உள்ள 28ஆம் நூற்பாக்குறிப்பைக் காட்டியுள்ளார். அக்குறிப்பு வருமாறு:

''தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தே, அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும் (211) என்னு மிடத்தே அம்ம என்ப தற்கு உரைப்பொருட்கிளவி என்று பெயர் வைத்துள்ளார். பின்னர் உரைப்பொருட்கிளவி நீட்டமும் வரையார் (213)

**அம்ம வென்னும் அசைச்சொல் நீட்டம்**
**அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்**
**விளியொடு கொள்ப தெளியு மாறே**

என்ற நூற்பாவால் அம்ம இடைச் சொல்லாயினும் விளிப்பெயர் போல் விளிபெறும் என்றார்.

திவாகரம் அம்ம கேட்பிக்கும் வகை யசைச்சொல்லே (10) என்று கூறும்.

இலக்கணக் கொத்துரை பொருளிற்கு வேறாய் அம்ம கேட்பிக்கும் என ஏவுதற் கருத்தாகக் கூறப்பட்டுள்ளதென்பர். (பாயி. 6 நூ. உரை)[30]

விளிமரபில் சொல்லப்பட்ட நூற்பாவிற்கு ஒப்பீடாகத் தொல்காப்பியத்திலிருந்து ஒப்பீடு காட்டி உணர்த்துவது அடிகளாசிரியரின் திறமைக்குச் சான்றாகும்.

மேலும், திவாகரம், இலக்கணக் கொத்துரை ஆகிய நூல்களையும் ஒப்பீடாகக் குறித்துள்ளார்.

## 3.7. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பின் சிறப்புகள்

அடிகளாசிரியரின் தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பின் சிறப்பாக அதன் பொருட் புலப்பாட்டினைக் கொள்ளலாம்.

இலக்கணம் என்பது பொருள் பொதிந்து (மறைந்து) கிடக்கும் நிலமாகும். அதனைக் கற்பார் கண்ணுக்குப் புலப்படுமாறு வெளிப்படுத்திக் (தெளிவுபடுத்தி) கூறுதல் உரையாசிரியர் கடமை. உரையாசிரியர் காலத்து நடை இக்காலத்து வாழ்கின்ற மக்களுக்குக் கடினமாகத் தோன்றுவது இயல்பே. இவ்விடத்தில் பதிப்பாசிரியர் தன்னுடைய பணியாக நூலையும் உரையையும் உள்ளது உள்ளவாறே பதிப்பிப்பாரேயாகில் அது மேற்கொண்டு நன்மை பயக்க இயலாத செயலாகவே முடியும்.

ஆகவே, பதிப்பாசிரியர் தான் பதிப்பிக்கும் துறையிலே வல்லவராயிருப்பின் அத்துறையைக் காலத்திற்கேற்றவாறு விளக்கம் செய்யும் கடமையும் தன்தலையில் சுமத்தப்பட்டுள்ளது என்ற உண்மையை அறிவார். எனவேதான் திரு. அடிகளாசிரியர் ஓர் ஏட்டிலே உள்ளதை இன்னோர் ஏட்டிலே எழுதுவது அல்ல பதிப்பித்தல், காலத்தின் வழி நின்று உணர்த்துதலையுடைய பணியே பதிப்பித்தல் என்பதைத் தன் பதிப்புப் பணியின் மூலம் மெய்ப்பித்துள்ளார்.

தொல்காப்பியச் சொல்லதிகாரம் இளம்பூரணர் உரையினைப் பதிப்பிக்கக் கருவி நூல்களாக அடிகளாசிரியர் இருபது இலக்கியநூல்களையும் பத்துஇலக்கண நூல்களையும் பதினொரு உரைநூல்களையும் இரண்டு நிகண்டுகளையும் கையாண்டுள்ளார்.

சொல்லதிகாரப்பதிப்பு இடைப்பட்ட பதிப்பு என்பதனால் முதற்பதிப்பாகிய எழுத்ததிகாரப் பதிப்பின் திறமும், அடுத்து

பதிப்பிக்க வேண்டிய பொருளதிகாரப் பதிப்பின் எடுப்பும் இப்பதிப்பில் தோன்றுமாறு தனிச் சிறப்போடு திகழும் வண்ணம் இப்பதிப்பினைத் தனி மதிப்புடன் பதிப்பித்துள்ளார்.

இப்பதிப்பில் முப்பத்தொரு விழுக்காடு (31%) நூற்பாச் சொல்லகராதி மற்றும் உதாரண மேற்கோள் அகராதி இடம் பெற்றுள்ளது. இதுவே இப்பதிப்பின் சிறப்பாகும்.

இப்பதிப்பில் ஆறு புள்ளி அளவுகளில் எழுத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் ஒன்றன் பின் ஒன்றாக வரும் இயல், நூற்பா, அடிக்குறிப்பு எண், உரை, குறிப்புரை, பாட வேறு பாடு ஆகியன குழப்பமின்றி ஒரே சீராக நூலைப் படிக்க உதவு கின்றன.

திருப்பாதிரிப்புலியூர் மடத்து ஓலைச்சுவடி, திருவாவடு துறை மடத்து ஓலைச்சுவடி ஆகிய அரிய சுவடிகளை ஒப்பு நோக்கிப் பதிப்பித்துள்ளதால் இடைச்செருகல் இருக்குமோ என்ற ஐயப்பாட்டிற்கு இடமின்றி இப்பதிப்பு விளங்குகின்றது.

## 3.8. முடிவுரை

1. தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பைப் போன்றே சொல்லதிகாரப் பதிப்பைப் பதிப்பிக்க வேண்டும் என்ற அடிகளாசிரியரின் எண்ணம் நிறைவேறப் பத்தொன்பது ஆண்டுகள் ஆயின. இவ்வெண்ணத்தை நிறைவேற்றிய பெருமை தஞ்சாவூர் - தமிழ்ப்பல்கலைக் கழகத்தையே சாரும்.

2. அடிகளாசிரியர், தொல்காப்பியச் சொல்லதிகாரத்தைப் பதிப்பிக்க ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் இரண்டு சுவடிப் படிகளையும் பயன்படுத்தியுள்ளார்.

3. நூற்பா, நுதலிய்பொருள், நூற்பாப் பதவுரை, எடுத்துக் காட்டு, நூற்பாக்குறிப்பு, உரைக்குறிப்பு, பாடவேறுபாடு, சுவடி வேறுபாடு, பிறர் கருத்து, தன் கருத்து என்ற அமைப்பில் இப் பதிப்பைப் பதிப்பித்துள்ளார்.

4. இப்பதிப்பில் எண்பதுக்கும் மேற்பட்ட சுருக்க விளக்கங்கள் காணப்படுகின்றன. இவ்விளக்கங்கள் இவரின் புலமை அகலத்திற்குச் சான்றாகத் திகழ்கின்றன.

5. வந்தது கொண்டு வாராதது முடித்தல், தொகுத்துச் சுட்டல், வகுத்துச் சுட்டல், அகலங்கூறும் உரை முதலான உத்தி களைக் கையாண்டு உரைக்குறிப்பு எழுதியுள்ளார். இளம்பூரணரின் உரை சிதைந்த இடத்தில் வெற்றிடம் இல்லாத வண்ணம் உரை கூறியுள்ளார். இவ்விடத்தில் பதிப்பாசிரியரின் கடமையை அடிகளாசிரியர் நன்றாகச் செய்துள்ளார்.

6. திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு. ஞானியார் மடத்து ஓலைச்சுவடி, திருவாவடுதுறை ஆதீனத்து ஓலைச் சுவடி ஆகிய இரண்டு சுவடிப் படிகளைக் கையாண்டு பல நல்ல பாட பேதங் களைக் கையாண்டுள்ளார். இயல்களின் பெயர்களையும் சுவடிப் படியால் திருத்தம் செய்துள்ளார்.

7. சொல்லதிகாரத்தின் முதல் நூற்பாவிற்குப் பதினான்கு பக்கங்களில் விளக்கக் குறிப்புகளைத் தந்துள்ளார். இக்குறிப்பு களை நயம் தோன்ற விளக்கியுள்ளார்.

8. உயர்திணை, அஃறிணை என்னும் சொற்கள் இலக்கண நூல்களில், பயின்ற அளவு இலக்கிய நூல்களில் பயிலவில்லை என்ற கருத்தை உணர்த்தியுள்ளார்.

9. இப்பதிப்பு முழுவதும் ஒப்பீடுகள் காணப்படுகின்றன. இளம்பூரணர் உரையோடு சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், மயிலைநாதர் முதலான உரையாசிரியர்களின் உரைகளையும், பெயரே அறிய இயலாத உரையாசிரியர்களின் உரைகளையும் ஒப்பீடு செய்து நல்ல முறையில் பதிப்பித்துள்ளார். சுருங்கக் கூறின், உரையாசிரியர்களின் கருத்தை ஒருங்கே திரட்டி ஒப்பிட்டுக் கூறியுள்ள ஆற்றல் வியக்கும் வண்ணம் உள்ளது.

10. பொருள் புலப்பாட்டு நெறி, நூற்பா அகராதி என்ற முறையைத் தாண்டி உரைப் பொருளடைவுக்கு அகராதி, எழுத் துகளின் புள்ளி அளவுகள், நூற்பாவிற்கு எழுதப்பட்ட குறிப்புரை,

பாடவேறுபாடு, இருபது இலக்கிய நூல்கள், பத்து இலக்கண நூல்கள், பதினொரு உரைநூல்கள், இரண்டு ஏட்டுச் சுவடிகள், இரண்டு நிகண்டு நூல்கள் ஆகியவற்றையெல்லாம் கையாண்டு இருப்பது இப்பதிப்பின் சிறப்பாகும்.

சான்றெண் விளக்கம்


1. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். எழுத்து. இளம்பூரணர் உரை, பதிப்புரை. ப. 11.
2. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம்பூரண்ர் உரை, பக். 7, 8.
3. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடையியல், நூற்பா. 1
4. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம்பூரணர் உரை, ப. 209.
5. மேலது நூல், ப. 210
6. மேலது நூல், ப. 211
7. தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், நூற்பா 22.
8. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம்பூரணர் உரை. ப. 303.
9. மேலது நூல், பக். 303, 304.
10. மேலது நூல், பக். 208, 209.
11. மேலது நூல், ப. 209.
12. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம் பூரணர் உரை, ப. 223.
13. தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், நூற்பா. 65.
14. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம்பூரணர் உரை, 73.
15. தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், நூற்பா.1
16. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம் பூரணர் உரை, ப. 9.
17. மேலது நூல்
18. மேலது நூல்
19. மேலது நூல். ப. 7
20. மேலது நூல் ப. 8
21. மேலது நூல். ப. 12

*22.* தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கம் நூற்பா. *23.*

*23.* அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம்பூரணர் உரை, ப. *34.*

*24.* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், நூற்பா. *48.*

*25.* அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம் பூரணர் உரை, ப. *206.*

*26.* தொல்காப்பியம், சொல்லதிகாரம், பெயரியல், நூற்பா. *19.*

*27.* அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம்பூரணர் உரை, ப. *156.*

*28.* மேலது நூல்.

*29.* தொல்காப்பியம், சொல்லதிகாரம், விளிமரபு, நூற்பா. [illegible]6.

*30.* அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல். சொல். இளம் பூரணர் உரை, பக். *228, 229.*

இயல் : 4

# அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்பில் தொல்காப்பியச் செய்யுளியல்

## 3.0. முன்னுரை

அடிகளாசிரியர் பதிப்பித்த இலக்கணப் பதிப்பில் தொல் காப்'பியச் செய்யுளியல் பதிப்பினை ஆராய இவ்வியல் முற்படு கின்றது. செய்யுளியல் பதிப்பு வரலாறு, பதிப்பு முறைகள், உரை விளக்கம், பாடவேறுபாடுகள், ஒப்பீடுகள், பதிப்பின் சிறப்புகள் ஆகிய தலைப்புகளில் இவ்வியல் ஆராயப்பட்டுள்ளது.

## 4.1.அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் செய்யுளியல் பதிப்பு வரலாறு

தஞ்சாவூர் - தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை யினர், 1985-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பேராசிரியர் அடிகளா சிரியரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, ''தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளில் இளம்பூரணர் உரையைப் பதிப்பித்து'' வெளியிட்டுள்ளனர். பதிப்பாசிரியர் அடிகளாசிரியரவர்கள் 1969-ஆம் ஆண்டில் தொல்-எழுத்து- இளம்பூரணர் உரையை மிகச் சிறந்த முறையில் பதிப்பித்துள்ளார் எனக் கண்டோம்.

அப்பதிப்பின் பதிப்புரையில் தொல்காப்பியச் செய்யுளியல் இளம்பூரணர் உரையைப் பதிப்பிக்க இறைவனை வேண்டினார் என்ற செய்தியையும் அறிந்தோம். இச்செய்தியை அவரே செய்யுளியல் பதிப்பிலும் குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு:

''....எனக்குக் கிடைத்த இரண்டு ஏட்டுச் சுவடிகளின் துணைகொண்டு ஆராய்ந்து 1969-இல் தொல்காப்பியம் இளம் பூரணர் எழுத்ததிகார உரையை மிக முயன்று அச்சிட்டேன். அப்பதிப்பின் பதிப்புரையில் (பக்கம் XI) எழுத்ததிகார இளம் பூரணர் உரையினைப் பதிப்பித்தாற் போலவே சொல்லதிகார இளம்பூரணர் உரையினையும் செய்யுளியல் இளம்பூரணர் உரை யினையும் பதிப்பிக்க வேண்டும் என்பது என் எண்ணமாகும். அவ்வெண்ணத்திற்கும் இறைவனுடைய திருவருள்தான் துணை செய்யவேண்டும் என்று எழுதியிருந்தேன். அத்திருவருளின் பேராற்றலால் தஞ்சாவூரில் தமிழ்ப்பல்கலைக்கழகம் ஏற்பட் டது. அடியேனுக்கு அதில் ஒரு பணியும் கிடைத்தது. முதற் பணியாகத் தொல்காப்பியம் செய்யுளியல் இளம்பூரணர் உரையைப் பதிப்பிக்க வேண்டி அதனை ஆராயத் தொடங்கினேன்.''[1]

தொல்காப்பியச் செய்யுளியலைப் பதிப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அடிகளாசிரியரின் நாடி நரம்புகளில் ஓடிக் கொண்டிருந்தது என்ற கருத்தை மேற்கூறிய செய்தியால் உணரமுடிகின்றது. திருவருள் துணையால் செய்யுளியல் அச்சாகியுள்ளது என்ற உண்மையும் பெறப்பட்டது.

அடிகளாசிரியர் தொல்காப்பியச் செய்யுளியலை ஆராய்ந்து பதிப்பித்தபோது அவர் வயது 72 ஆகும். முதிர்ந்த வயதில் கண் - நரம்பு நோயால் போராடிய நிலையில் குடும் பத்தை விட்டு இளையமகனுடன் மட்டும் தஞ்சாவூரில் வந்து தங்கிப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். மேற்குறித்த இளைய மகன் என்பவர் இச்சொற்பொழிவாள ராகிய (இந்நூலாசிரியராகிய) முனைவர் அ. சிவபெருமான் ஆவார்.

வயதான அந்தியக் காலத்தில் மனைவி மக்களோடு சொந்த ஊரில் தங்கி ஓய்வெடுக்காமல் தமிழைக் காக்கவும் தமிழ்த் தொண்டு செய்யவும் மிகவும் வருந்தி உழைத்தார் என்பது கண் கூடு. தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி நிகழ்ந்த காலத்தில் நானும் உடனிருந்து எழுத்துப்பணி, சமையற்பணி முதலான பல பணிகளைச் செய்து உதவியுள்ளேன் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் செய்யுளியல் பதிப்பு வரலாற்றில் நிகழ்ந்த ஓர் அரிய நிகழ்வினை அறிவோம். இந்நிகழ்வை அடிகளாசிரியரே தம்பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

''எங்கள் மாண்புமிகு துணைவேந்தர் வ.அய்.சுப்பிர மணியம் அவர்கள், தமிழக அரசு தோற்றுவித்த இப்பல்கலைக் கழகத்தில் தன் தூய உணர்வினையே அடியாக வைத்துச் சிறந்த பல செயல்களைச் செய்து வருகின்றார்கள். அவர்களிடம் 8.3.1982 - இல் இளம்பூரணர் உரையினை ஆராய்ந்து பதிப்பிக்க ஆணை கேட் டேன். அவர்கள் செய்க - ஆனால் பதிப்பு முறை மிகச் சிறப்பாக இருக்க வேண்டும். இல்லையெனில் நாம் குறைக்கு ஆளாவோம். ஏடு, கையெழுத்துப் பிரதிகளை முதலில் தொல்காப்பியம் முழுமைக்கும் திரட்டுக. பாடபேதம் பார்க்க. மூலபாடம் நிர்ண யிக்க என்று அறிவுரை கூறி ஆணை தந்தார்கள்.''[2]

மேற்கண்டவாறு அடிகளாசிரியர் குறிப்பிடுகின்ற நிகழ் வானது பதிப்புப்பணி எங்ஙனம் ஆழ்ந்து செய்யப் படவேண்டிய பணி என்பதை நமக்கு அறிவுறுத்துகின்றது. மேலும், மாண்பமை துணைவேந்தரவர்கள் எத்துணை எச்சரிக்கை உணர்வுடன் ஓலைச் சுவடிகளையும், கையெழுத்துப் படிகளையும் திரட்டியபின் பணியைத் தொடர்க என அறிவுறுத்தியுள்ளார்கள் என்பதையும் உணர முடிகின்றது. அத்துடன் மேற்குறித்த எச்சரிக்கை உணர்வில் ஒரு சிறிதும் குறையாமல் அடிகளாசிரியர் தொல்காப்பியச் செய்யுளியலைப் பதிப்பித்துள்ளார்கள் என்றும் கொள்ள முடிகின்றது.

## 4.2. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் செய்யுளியல் பதிப்பு முறைகள்

அடிகளாசிரியர், தொல்காப்பியச் செய்யுளியல் இளம்பூரணர் உரையைப் பதிப்பிக்க மாண்பமை துணைவேந்தர் அவர்களின் கருத்துக்கேற்பக் கீழ்க்காணும் கருவிகளைத் தேடித் தொகுத்துக் கொண்டார்.

1. ஓலைப்பிரதிகள்
2. அச்சுப் பிரதிகள்
3. கையெழுத்துப் பிரதிகள்
4. செந்தமிழ்ச்செல்வி முதலான ஆராய்ச்சி இதழ்களில் காணப்படும் கட்டுரைகள்.
5. பல்கலைக்கழகக் கருத்தரங்கு வெளியீடுகள்
6. தமிழறிஞர் எழுதிய பொருளதிகாரப் பொருள் பற்றிய தனி வெளியீடுகள்

மேற்கூறியவற்றைத் தொகுத்த பின்னர் சென்னையில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் முதலிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள அறிஞர்கள் தொல்காப்பியம் பற்றிச் செய்யும் ஆராய்ச்சி வேலைகளின் தன்மைகளை நன்கு அறிந்து கொண்டார்.

தொல்காப்பிய ஓலைப்பிரதிகள் எங்கெங்கு உள்ளன என்பதை முதலில் தெரிந்து கொண்டு அவற்றைப்பெற முயன்றுள்ளார் அடிகளாசிரியர். செய்யுளியல் பதிப்பைப் பதிப்பிக்கக் கையாண்ட நூல்கள் வருமாறு.

1. திரு.வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பதிப்பித்த செய்யுளியல் பதிப்பு.
2. மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் பதிப்பித்த செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை.
3. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பதிப்பித்த செய்யுளியல் இளம்பூரணர் உரை.
4. யாப்பருங்கல விருத்தியுரை
5. யாப்பருங்கலக் காரிகை உரை

6. வீரசோழிய உரை
7. நேமிநாத உரை
8. வெண்பாப்பாட்டியல் உரை
9. இலக்கண விளக்கம்.
10. தொன்னூல் விளக்கம்
11. சிதம்பரப் பாட்டியல் உரை
12. முத்து வீரியம்
13. தொல்காப்பியம் செய்யுளியல் பேராசிரியர் உரை
14. பல இலக்கிய நூல்கள்

மேற்குறித்த பல நூல்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு செய்யுளியலைப் பதிப்பித்துள்ளார். ஒருநூலைப் பதிப்பிக்கத் தொடங்குவதற்கு முன்பு அந்நூலோடு தொடர்புடைய அனைத்து நூல்களையும் திரட்டி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை அடிகளாசிரியர் நமக்கு உணர்த்துகின்றார்.[3]

அடிகளாசிரியர் எப்பணியில் ஈடுபட்டாலும் ஆழ்ந்த செயல்பாட்டுடன் ஈடுபடுவார். அதிலும், குறிப்பாக இலக்கணப் பதிப்பில் ஈடுபடும்போது ஆழ்ந்த செயல்பாட்டுடன் எச்சரிக்கை உணர்வுடன் செயல்படுவார். சிறுபிழையும் நேர்ந்துவிடக்கூடாது என்னும் எச்சரிக்கை உணர்வுடன் இப்பதிப்பைப் பதிப்பித்துள்ளார். இந்த எச்சரிக்கை உணர்வு இப்பதிப்பின் ஒவ்வொரு செயலிலும் வெளிப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக அச்சகப் பணியைச் செய்கின்ற அச்சகத்தாருக்கு அடிகளாசிரியர் எடுத்துக் கூறிய அறிவுரைகளைக் கொள்ளலாம். அவ்வறிவுரைகளை அவரே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1. மூலமும் உரையும் பாடவேறுபாடுகளும் அடங்கிய பிரதி ஒன்று.

2. மூலத்திற்கும் உரைக்கும் விளக்கக் குறிப்பு அடங்கிய பிரதி மற்றொன்று.

3. மேற்கண்ட இரண்டு பிரதிகளையும் அச்சகத்தார் அச்சிடும்பொழுது கருத்தில் வைக்க வேண்டியது.

அ. முன்னே மூலம் இருத்தல் வேண்டும். இதனை அறிய சிவப்புக் கோடுகள் போடப்பட்டுள்ளன. இதனை நல்ல பெரிய எழுத்தில் அச்சிடுக.

ஆ. மூலத்தின்பின் உரையைத் தட்டச்சுப் பிரதியில் அமைக்கப்பட்டிருக்கும் முறையில் அச்சிடவேண்டும். உரைக்கு வேறு நல்ல எழுத்தினைப் பயன்படுத்துக. அதாவது மூலபாடத் தினும் வேறுபட்ட சிறுவடிவ எழுத்து.

இ. உரையில் வரும் மேற்கோள்களுக்கும் சிறப்புப் பெயர்களுக்கும் பச்சை இங்கியால் குறியீடு செய்யப் பட்டுள்ளது. உரைக்குப் பயன்படுத்தும் எழுத்துகளின் அமைப்பில் தடித்த எழுத்துகளை இதற்கும் பயன்படுத்துக.

ஈ. மூலத்திற்குள்ள பாடபேதம் மூலத்தின் கீழும், உரைக்குள்ள பாடபேதம் உரைக்குக் கீழும் கொடுக்கப்பட்டு எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளது. ஆனால், அச்சகத்தார் மேற்கண்ட முறையைப் பின்பற்றாமல், அதாவது மூலபாட பேதம், உரைபாடபேதம் என்று இரண்டாகப் பிரித்துக் கொள்ளா மல் எந்தப் பாடபேதம் அந்தப் பக்கத்தில் வருகிறதோ அவற்றிற்கு ஒன்று இரண்டு முதலான எண்களை முறைப்படி கொடுத்துப் பாடபேதங்களை அடிக்குறிப்பிற் கொடுத்துவிடுக. பாடபேதத் திற்குச் சிறிய எழுத்தைப் பயன்படுத்தலாம்.

4. மூலம், உரை பாடபேதங்களை மேற்குறிப்பிட்டவாறு அச்சிட்டு முடித்தபின் அந்தந்த நூற்பாவுக்குரிய பதிப்பாசிரியர் குறிப்புகளை அவற்றின் பின் அச்சிடுக.

அ. அஃதாவது

| | |
|---|---|
| 1. மூலநூற்பா | |
| 2. இளம்பூரணர் உரை | முதற்பிரதி |
| 3. பாடபேதம் | |
| 4. பதிப்பாசிரியர் நூற்குறிப்பு | இரண்டாவது பிரதி |
| 5.பதிப்பாசிரியர் உரைக் குறிப்பு | |

என்ற முறையில் அச்சிடுக.

மேற்கண்டவாறு பதிப்புப் பணியின் ஒவ்வொரு நிலையிலும் அடிகளாசிரியர் சிறப்பாகச் செயல்பட்டுள்ளார்.

## 4.3. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் செய்யுளியல் பதிப்பில் உரை விளக்கம்

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளைச் சொல்லுமிடத்தே யாப்பு என்றொரு உறுப்பை ஆறாவது உறுப்பாகச் சொல்லியுள்ளார். அவ்வுறுப்பைப் பற்றிய அடிகளாசிரியர் கருத்தே உரை விளக்கத்திற்குச் சிறந்த சான்றாகும். யாப்பு என்றால் என்ன என்பதற்குத் தொல்காப்பியர்,

> 'எழுத்து முதலா ஈண்டிய அடியில்
> குறித்த பொருளை முடிய நாட்டல்
> யாப்பென மொழிப யாப்பறி புலவர்'[5]

என்றொரு நூற்பாவைக் காட்டியுள்ளார். இந்நூற்பாவிற்கு அடிகளாசிரியர் நேரில் கூறிய உரையும் விளக்கமும் வருமாறு:

எழுத்தும் அசையும் சீரும் ஆகிய இவற்றால் ஓசைப் பொலிவுடன் அமைந்த அடியில் புலவன் தான்குறித்த பொருளை அரைகுறையாகக் கூறிவிடாமல் முற்றிலும் கூறுவதே யாப்பு என்னும் உறுப்பாகும்.[6]

மேற்கூறிய உரையைக் கூறிய அடிகளாசிரியர் மேலும் கூறிய விளக்கம் வருமாறு:

யாப்பு, பொருளை யாத்தல் என்க. சில புலவர் எழுத்து, அசை, சீர், அடி இவற்றை இனிய ஓசைப்பட அமைத்தல் ஒன்றையே கருதி, குறித்த பொருளை அரைகுறையாக விளக்கம் இல்லாமல் வைத்து விடுவார்கள். அவ்வாறு வைக்காமல் குறித்த பொருள் முற்றிலும் தெளிவாக அமையுமாறு அடியில் வைக்கப்பட வேண்டும் என்பதற்காகவே தொல்காப்பியர் யாப்பு என்பதைச் செய்யுளுக்கு உறுப்பாகக் கூறுகின்றார்.

எழுத்து அசை சீரால் அமைந்த அடி நல்ல ஓசையின் பத்தைத்தர அவ்வடியில் நாட்டிய பொருள் முடியப் பொருள் இன்பத்தைத் தர அமைந்த பாடல்களே உயர்ந்த இலக்கியப் பாடல்களாகும்.[7]

மேலது நூற்பாவிற்கு இளம்பூரணர் உரை வருமாறு:

எழுத்து முதலாக அசை, சீர், அடியென ஈட்டப்பட்ட அடியினால் தான் குறித்த பொருளை இறுதியடியளவும் முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.[8]

இளம்பூரணர் கருத்தின்படி பார்த்தால் முதலடியிலிருந்து இறுதியடிக்குள் குறித்த பொருள் முடிந்து விடவேண்டும். அதுவே யாப்பு என்னும் உறுப்பாம் என்பது பெறப்பட்டது.

மேலும் யாப்பினைப்பற்றி அடிகளாசிரியர் நூலின் முன்னுரையில் அரிய கருத்துகளைக் கூறியுள்ளார்.

பிற்காலத்தார் யாப்பினைத் தொல்காப்பியர் ஓதியவாறு உறுப்பாகக் கொண்டிலர். அதனைச் செய்யுளாகிய உறுப்பு என்றே கொண்டு எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு இழுக்கா நடையது யாப்பெனப்படுமே (யா.கா.1) என்றனர்.

அகராதி எழுதியவரும் யாப்பு என்பது செய்யுள் உறுப்பு என்பதை எழுத மறந்துவிட்டு அதனைச் செய்யுள் என்றே எழுதிவிட்டனர்.

குறித்த பொருளை அடியில் நாட்டும் யாப்பானது பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என எழு வகைப்பட்டு வரும் என்பர் தொல்காப்பியர்[9]

இவ்வாறு மேற்கூறிய நூற்பாவிற்கு (74) குறித்த பொருளை முடிய யாத்தல் என்றொரு பாடபேதமும் உண்டு என்று அடிகளாசிரியர் குறித்துள்ளார்.[10] (யாத்தல் யாப்பாம்)

குறித்த பொருள் என்றது அவ்வடியில் தான் வைக்கக் கருதிய பொருளைப் பிறிதோர் அடியுங் கொண்டு கூட்டாது அமைந்து தோன்றச் செய்தல் என்ற பேராசிரியர் உரையை எடுத்துக் கூறியுள்ளார்.[11]

மேலும், அடிகளாசிரியர் குறித்த பொருள் என்பதற்குப் பின்வரும் இரண்டுபொருள் கூறினார்.

1. குறித்த பொருளை அடிதோறும் முடிய நாட்டல்
2. குறித்த பொருள் கொண்டு கூட்டாது பொருள் காணல்[12].

மேலது நூற்பாவிற்கு (74) விளக்கமாக அடுத்த நூற்பாவையும் அடிகளாசிரியர் அமைத்துக் கொண்டார்.

''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் மொழியது என்மனார் புலவர்''.[13]

இந்நூற்பாவில் இடம்பெற்றுள்ள யாப்பு என்பதற்கு அடிகளாசிரியர் தந்துள்ள விளக்கம் வருமாறு:

யாப்பாவது பாட்டியாப்பு, உரை யாப்பு, நூலியாப்பு, மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, பழமொழியாப்பு என ஏழு வகைப்படும்.

மேலைச் சூத்திரத்துள் குறித்த பொருளை முடிய நாட்டல் என்றமையானும், இச்சூத்திரத்துள் நாற்பேரெல்லை யகத்தவர் வழங்கும் யாப்பின் மொழியது என்றோதினமையானும் குறித்த பொருள் முடியுமாறு சொற்றொடுத்தல் (யாப்பு) என்று கொள்ளப்படும்.[14]

குறித்த பொருளை முடிய நாட்டல் யாப்பு என்றால் குறித்த பொருள் எது என்பதற்கு அடிகளாசிரியர் நேரில் விளக்கம் கூறினார்.

ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலிப்பா, முதலிய பாடல்களெல்லாம் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று முதற் பொருட்கும் உரியவாய் வரும். இதனைத் தொல்காப்பியர்

**அந்நிலை மருங்கின் அறமுத லாகிய**
**மும்முதற் பொருட்கும் உரிய என்ப (செய்யுளியல் 102)**

என்னும் நூற்பாவால் உணர்த்தியுள்ளார்.[15]

யாப்பினைப் பற்றி மேற்கண்டவாறு பல விளக்கங்களை அடிகளாசிரியர் அப்பதிப்பில் விளக்கியுள்ளார். அப்பதிப்பில் சொல்லப்படாத செய்திகளை நேரிலும் கூறினார்.

## 4.4. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் செய்யுளியல் பதிப்பில் பாடவேறுபாடுகள்

நூலாசிரியர்கள் எடுத்துக் கொண்ட கருத்துகளில் உரையாசிரியர்கள் தமக்குள் வேறுபட்டு நிற்கும்போது பாடவேறுபாடுகள் தோன்றுகின்றன. அவரவர் நிலையில் நின்று நோக்கும் பொழுது ஏற்படுகின்ற கருத்துகளே அவரவர்க்கு ஒப்புமையாவதால், தாம்கொண்ட பாடமே முறையானது என்று நிறுவமுற்படுவர். அவ்வாறு பல்வேறு உரையாசிரியர்கள் தமக்குள் மாறுபட்டு நிற்கின்ற ஓரிடத்தினை - அரிய கருத்துக்குவியலை இங்கே அடிகளாசிரியர் தமது பதிப்பாசிரியர் விளக்கத்தில் தருகின்றார். இஃது இலக்கணச்சுவைஞர்களுக்கு நல்ல விருந்தாக அமைகின்றது. மேலும் பாடவேறுபாடுகள் எப்படி எழுகின்றன என்ற விளக்கமும் கிடைக்கப் பெறுகின்றது.

தொல்காப்பியர் செய்யுளியலில், ''இறுவாய் ஒப்பின் அஃது இயைபு என மொழிப''[16] என்றொரு நூற்பாவைப் படைத்துள்ளார். இந்நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் கூறுகின்ற விளக்கங்களை அடிகளாசிரியர் கூறப்போந்தது ஏன் எனில்,

இயைபு என்பது தற்காலத்தில் பெரிதும் கையாளப்படுகின்றது. ஆனால், இலக்கண நெறிமுறைகள் அறியப்படாமலே கையாளப் படுகின்றது. சான்றாக,

போடா போடா புண்ணாக்கு
போடாதே தப்புக் கணக்கு

என்பதும் இயைபுதான். ஆனால் இவ்வியைபு சிரிப்பிற்குரியதாகி விடுகின்றது. எனவே தான் அடிகளாசிரியர் இயைபின் இலக் கணத்தை மிகவும் நுணுக்கமாகப் பல்திறக் கருத்துகளால் விரித்து விளக்குகின்றார். அதே நேரத்தில் பாடவேறுபட்டையும் சுட்டிக் காட்டியுள்ளார். அவற்றை அறிவோம்.

இறுவாய் ஒப்பின் அஃது இயைபென மொழிப என்பது நூற்பா.

நூற்பா நுதலியபொருள் இயைபுத் தொடை ஆமாறு உணர்த்துதல்.

பொருள் - அடிதொறும் ஈற்றுச்சீர் (அல்லது எழுத்து) ஒன்றி வருதலே இயைபுத் தொடையாகும்.

எடுத்துக்காட்டுப்பாடல்.

இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்கும் ஆர் அணங்கே
ஆடுஅமைத் தோளி கூடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதல் பொறித்த திலகமும் அணங்கே[17]
*(யா.வி.கழ.பக்.163)*

அசை, சீர் எனக் குறிப்பின்றிக் கூறினமையால் ஓரெழுத்து இறுதிக்கண் ஒப்பினும் இயைபெனக் கொள்க. இனி அடிகளாசிரியர் பதிப்பாசிரியர் விளக்கம் என்னும் தலைப்பின்கீழ் கூறியுள்ளவற்றை அறிவோம்.

பதிப்பாசிரியர் விளக்கம்
பாடவேறுபாடு

இறுவாய் ஒப்பினஃ தியைபென மொழிப என்பது இளம்பூரணர் பாடமாகும்.

இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே என்பது பேராசிரியர், நச்சினார்க்கினியர் பாடமாகும்.

யாப்பருங்கலம் இயைபுத் தொடையை
**இறுவாய் ஒப்பினஃ தியைபெனப் படுமே**

என்று கூறுகின்றது.

இந்நூற்பா உரையில், இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே என்றார் தொல்காப்பியர் என்பது பேராசிரியர், நச்சினார்க்கினியர் பாடமாகவும், இறுவாய் ஒப்பினஃ தியைபென மொழிப என்றார் அவிநயனார் என்பது இளம்பூரணர் பாடமாகவும் உள்ளன.

மர்ரே பதிப்பு பேராசிரியர், நச்சினார்க்கினியர் பாடத்தை முதலாகத் தந்து, இளம்பூரணர் பாடத்தையும், இறுவாய் ஒன்றின் இயைபென மொழிப என்னும் மற்றொரு பாடத்தையும் பாடவேறுபாடாகக் கொடுக்கிறது.

## இயைபு

1. இளம்பூரணர் செய்யுளியல் 97-ஆம் நூற்பாவுரையில் இயைபை இறுதிநிலை எழுத்தின்மேல் வைத்துக் காட்டுகிறார். இந்நூற்பாவுரையிலும் அடிதொறும் ஈற்றெழுத்து ஒன்றி வரின் என்று எழுதுவதால் இவர் இயைபுத் தொடைக்கு ஈற்றெழுத்தினையே கருவியாக அமைத்துக் கொள்கிறார் என்பது தெரிகின்றது.

2. ஆனால் இறுவாய் ஒப்பினஃதியைபெனப் படுமே (40) என்னும் யாப்பருங்கல நூற்பாவிற்கு அதன் உரையாசிரியர்

அடிதொறும் இறுதிக்கண் எழுத்தானும், சொல்லானும் ஒன்றி வரின் அஃது அடியியைபுத் தொடை எனப்படும் என்று எழுதுவ தால் இயைபுத் தொடை எழுத்து, சொல் என்னும் இரண்டால் வரும் என்று அவர் கருதுகிறார் என்பது தெரிகின்றது.

3. பேராசிரியர் வாளாதே இறுவா யொன்றல் என்றா ராயினும் ஆண்டு ஒன்றுவது பொருளியைபின்றி எழுத்துஞ் சொல்லும் ஒன்றியடையின் இயைபா மென்பது. எனவே, எழுத் தடியியைபும் சொல்லடியியைபு மெனத் தொடை இரண்டாயின என்பர். நச்சினார்க்கினியரும் அதே கருத்தினராவார்.

4. ஆனால், காரிகை உரையாசிரியர் இறுதி இயைபு என்பது அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும் அசையானும், சீரானும் தம்முள் ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை எனப்படும் என்பர்.

5. பல்காயனாரும் நத்தத்தனாரும் முறையே

**இயைபே இறுசீர் ஒன்றும் என்ப**
**இறுசீர் ஒன்றின் இயைபெனப் படுமே**

என்னும் நூற்பாக்களால் இறுதிச்சீர் ஒன்றுதலையே இயை பென்பர்.

6. இலக்கணவிளக்க நூலார்

**இறுவாய் ஒப்பின் இயைபுத் தொடையாம் (723)**

என்று நூற்பா செய்து அடிதொறும் ஈற்றெழுத்தொன்றி வரத் தொடுப்பின் அடியியைபுத் தொடையாம் என எழுத்தினையே கூறுகின்றார்.

7. வீரமாமுனிவரும்

**ஈற்றெழுத்தொன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை** (நூ.212) என்பர்.

8. தொல்காப்பியர் இயைபு என்றொரு செய்யுள் வகை யினைக் கூறுகின்றார். அது எழுத்ததிகாரத்தே சொல்லிற்கு ஈறாக

வரும் என்ற ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வருமாறு செய்யும் செய்யுள் என்பர். (செய்யுளியல் 232)

9. இன்னும் வண்ணத்துள் இயைபு வண்ணம் என்பதொன்றுண்டு. அஃது இடையெழுத்து மிகுந்து வருவது. இது ஓசை பற்றியது. மேலன இரண்டும் இறுதி பற்றியனவாம்.

10. யா.வி.ஆசிரியர் இறுவாய் ஒப்பினஃ தியைபெனப் படுமே என்று சிறப்பித்ததனால் மோனையாய் வந்து இறுவாய் ஒத்தால் மோனை இயைபு என்றும், எதுகையாய் வந்து இறுவாய் ஒத்தால் எதுகை இயைபு என்றும், முரணாய் வந்து இறுவாய் ஒத்தால் முரண் இயைபு என்றும், அளபெடையாய் வந்து இறுவாய் ஒத்தால் அளபெடை இயைபு என்றும், பலவாய் வந்து இறுவாய் ஒத்தால் மயக்கியைபு என்றும், பிற வாராது இறுவாய் ஒத்தால் செவ்வியைபு என்றும் வழங்கப்படும் எனக் கொள்க என்பர்.

11. இயைபுத் தொடையைப் பலவாறு பிரித்தாலும் இத்தொடையை ஒன்றாகவே கருதினர் என்பதை இயைபுத் தொடை கிளையின்மையின் ஒன்றே (யா.வி.கழ.பக்185) என்னும் உரையாலும் இயைபொன்றாம் (யா.வி.கழ. பக். 185) என்னும் மேற்கோள் பாடலாலும் உணர்ந்து கொள்ளலாம்[18].

இதுகாறும் கூறியவற்றைத் தொகுத்து நோக்கின், இயைபு என்ற தொடைக்கு விரிவாக விளக்கம் கூறிச் செல்கின்றார். இத் துணை விளக்கங்களையும் ஒருசேரத்தருதல் அரிய முயற்சியன்றோ?

மேலும் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பதைப் போல பாடவேறுபாடு பற்றி அறியும்போதே இயைபு என்பதனையும் நமக்கு விளக்கிவிட்ட அடிகளாசிரியரின் திறன் பாராட்டப் படக்கூடியதாக உள்ளது.

## 4.5. அடிகளாசிரியர் பதிப்பித்த தொல்காப்பியச் செய்யுளியல் பதிப்பில் ஒப்பீடுகள்

அடிகளாசிரியர் பல்வேறு உரைநூல்களையும் செவ்வனே

அறிந்தவர். எனவே, ஒரு கருத்தை விளக்கப் புகுந்தால் பற்பல ஒப்பீடுகளைத் தந்து அக்கருத்தை எளிதாகப் புரிந்து கொள்ளச் செய்து விடுவார். பலரது கருத்தையும் ஒப்பீடு செய்வது மட்டும் தீர்வாக முடியாது. தனது கருத்தையும் கூறி ஒப்பீடு செய்ததில் சரியான கருத்து எது என்பதையும் நிறுவிக் காட்ட வேண்டும். அவ்வாறு நிறுவிக் காட்டுவதில் அடிகளாசிரியர் பயிற்சி பெற்றவராக விளங்குகின்றார். அவரது பயிற்சியைப் பதிப்பாசிரியர் விளக்கம் என்னும் தலைப்பின்கீழ் அறிந்து கொள்ளலாம்.

ஒருவரின் கருத்தை ஒருவர் ஒட்டியும், வெட்டியும் கூறுவதை இடையே நின்று எடுத்துக் கூறுவதும் ஓர் ஒப்பீடே. இருவர் என்றில்லாமல் பலரின் கருத்துகளையும் தம்மால் ஒப்பீடு செய்ய இயலும் என்பதை அடிகளாசிரியரின் செய்யுளியல் பதிப்பு மிகத் தெளிவாக உணர்த்துகின்றது. இப்பதிப்பின் பல இடங்களில் இவ்வொப்புமைகள் காணப்படுகின்றன. சான்றிற்கு மருட்பா என்பதனைப் பற்றி அடிகளாசிரியர் கூறியுள்ள ஒப்பீட்டு நிலைகளை நோக்குவோம்.

'மருட்பா ஏனை இருசார் அல்லது
தான்இது என்னும் தன்மை இன்றே'[19]

என்ற தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவிற்கு உரைவிளக்கம் தருகின்ற இடத்தில் அடிகளாசிரியரின் பதிப்பாசிரியர் கடமை உணர்வு பேரூற்றாய்ப் பொங்கிவரக் காண்போம்.

## பதிப்பாசிரியரின் விளக்கம்

### மருட்பா

### 1. இளம்பூரணர் கருத்து

செய்யுளியல் 115ஆம் நூற்பா கைக்கிளை தானே வெண்பாவாகி ஆசிரிய வியலான் முடியவும் பெறுமே என்பதாகும். இந்நூற்பா உரையில் இளம்பூரணர் கைக்கிளை வெண்பாவினால் வருதலன்றி முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடையிரண்டடியும் ஆசிரியமாகி வரும். இவ்வாறு வருவதனை மருட்பா என்பர். இக்கருத்தினான் மருட்பா தன்மையின்றே என ஓதினார் என்று கொள்க என்பர்.

*புறநிலை வாயுறை...பாவின வெண்ப (செய். 154)*

என்ற நூற்பாவுரையில் இளம்பூரணர் மருட்பா, கைக்கிளை, புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉ என்னும் நான்கு பொருளி னல்லது வேறு பொருளில் வரப் பெறாதாயிற்று என்பர்.

## 2. காரிகைக் கருத்து

யாப்பருங்கலக் காரிகை செய்யுளியலின் ஈற்றில் நான்கு பாக்களையும் சொல்லி முடித்த பின்னர்

> **பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்**
> **தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா**
> **வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்**
> **வண்பான் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே**

என்று மருட்பாவைக் கூறுகின்றது.

## 3. யாப்பருங்கலம் - விருத்தியாசிரியர் கருத்து

யாப்பருங்கலம் மருட்பாவைக் கூறவில்லை. ஆனால் அதன் உரையாசிரியர் வெண்பா வாசிரியம் (551) என்னும் நூற்பாவில், வெண்பா வாசிரியம் கலியே வஞ்சியெனப் பா நான்காகும் என்னாது பண்பாய்ந்துரைத்த பா நான்காகும் என்று சிறப்பித்துச் சொல்ல வேண்டிய தென்னையெனின் வெண்பா முதல் வந்து ஆசிரியமாய் இறுவன சிறப்பின்மையால் மருட்பா என்பது அறிவித்தற்கு வேண்டப்பட்டது; என்னை?

> **வெள்ளை முதலா வாசிரியம் இறுதி**
> **கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்**

என்றாராகலின். அவ்வாறு வருவனதாம் புறநிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூஉம் என இவை என்று கூறி புறநிலை (செய் 154) என்ற இந்நூற்பாவை மேற்கோள் காட்டுவர். மற்றும் அவர் கங்கை யமுனைகளது சங்கமம் போலவும், சங்கர நாராயணரது சட்டகக் கலவியே போலவும் வெண்பாவும் ஆசிரியமுமாய் விராய்ப் புறநிலை வாழ்த்து முதலிய பொருள்கள் மேல் யாப்புற்று மருட்சி யுடைத்தாகப் பாவி நடத்தலின் மருட்பா என்று வழங்கப்படும் என்பாருமுளர் என்பர்.

4. இலக்கண விளக்கம்

வெள்ளை முதலா ஆசிரிய மிறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்

என்று மருட்பா விலக்கணத்தைக் கூறுகின்றது.

*(இலக். விள. செய். நூ. 40)*

5. தொன்னூல் விளக்கம் கூறும் கருத்து

மருட்பா வெள்ளை வந்தபின் னகவல்
ஈற்றின் மருளும் இயல்புடைத் தென்ப. *(238)*

என்று கூறும். வெண்பா பலவடியாக முதற்கண் வந்தபின் அகவ லிறுதியாக மருண்டு தொடுப்பது மருட்பா வெனப்படும் என்பது அந் நூற்பாவுரை.

6. மருட்பா என்ற காரணம்

யாப்பருங்கல விருத்தியாசிரியர் மருட்சி யுடைத்தாகப் பாவி நடத்தலின் மருட்பா என்று வழங்கப்படும் என்று எழுது வதும் ஒத்த கருத்துடையன. ஆனால், மருட்சி, மயக்கம் என்பன ஒரு பொருட் சொல்லாதலால் வெண்பாவும் ஆசிரியப்பாவும் மயங்கி (கலந்து) வந்தது மருட்பா என்ப.[20]

மேற்கூறிய ஒப்பீட்டின் வழியே உரையாசிரியர்களின் ஒட்டி, வெட்டிக்கூறும் கருத்துகளை அறிந்து கொள்வதோடு எப்படி ஒப்பீடு செய்யப்படவேண்டும் என்ற நெறிமுறையையும் அறிந்து கொள்கின்றோம். அத்துடன் இலவச இணைப்பாக மருட்பா என்பதன் முழுவடிவிலான விளக்கத்தையும் பெற்றோம்.

## 4.6. அடிகளாசிரியர் பதிப்பித்துள்ள செய்யுளியல் பதிப்பின் சிறப்புகள்

அடிகளாசிரியர் தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் இளம்பூரணர் உரை என்னும் நூலைப் பதிப்பிக்க ஆர்வம் கொண்டார். அப்பதிப்புப் பணியையும் தொடங்கினார். ஆனால் அரியதொரு ஆய்வுப் பதிப்பாக அப்பதிப்புப் பணியைச் செய்து முடித்துள்ளார். முன்னரே உள்ள ஒரு நூலைப் பதிப்பிக்க அந்த உரையின் ஏதோவொரு மூலபாடம் மட்டும் இருந்தால்

போதும். ஆனால், அடிகளாசிரியரோ பல கருவி நூல்களையும் மூலபாடச் சுவடிகளையும் இலக்கிய நூல்களையும் அரிதின் முயன்று சேகரித்து வைத்துக் கொண்டு தம் பதிப்புப் பணியைச் செய்துள்ளார். இப்பதிப்பு நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆய்வியல் அறிவுடன் ஒப்புநோக்கிப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த பதிப்பைத் தனியொருவர் செய்ய இயலுமா எனப் பிறர்வியக்கும் வண்ணம் அடிகளாசிரியர் ஒருவரே முயன்று இப்பணியை முடித்துள்ளார். இதனால் இப்பதிப்பில் கருத்து வேறுபாடு இல்லாத தெளிந்த நீரோடை போன்ற தமிழ்நடையுடன் கூடிய விளக்கக் குறிப்புகள் உள்ளன. தனியொருவரின் கருத்து என்பதால் நூலமைவு மிகச்சிறப்புற்று விளங்குகின்றது.

இலக்கணம் கடினம்; பழைய உரையாசிரியர்களின் உரையோ அதனினும் கடினம். ஆழ்ந்தபுலமை பெற்றவர்களும் கூடத் தாங்கள் உணர்ந்து மகிழ்வார்களேயன்றிப் பிறருக்கு விளக்கிச் சொல்ல முன்வரமாட்டார்கள். அத்துடன் விளக்கம் பெறும் வகையில் நூலைப் பதிப்பிக்க ஒருவர் முன்வந்தாலும் அவருக்கு உதவிடத் தமிழ்கூறும் நல்லுலகம் முன்வருவதில்லை. இத்தகைய சூழலில்தான் அடிகளாசிரியர் இப்பதிப்புப் பணியைச் சிறப்புடன் செய்துள்ளார். இதுவே இந்நூலின் சிறப்பாகும்.

செய்யுளியலைப் பதிப்பிக்க வேண்டும் என்ற அடிகளாசிரியரின் எண்ணத்தைத் தஞ்சாவூர் - தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறைவேற்றியது. இவ்வகையில் இப்பதிப்பு தனிச்சிறப்பினைப் பெற்றுள்ளது. ஏனெனில் இப்பதிப்பு வெளிவரவே தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றியதோ அன்றித் தமிழ்ப் பல்கலைக் கழகம் தோன்றியதால் இப்பதிப்பு வெளிவந்ததோ என்று எண்ண வைத்து விட்டதல்லவா?

இப்பதிப்பு முப்பத்துநான்கு தலைப்புகளில் ஐந்நூற்றுத் தொண்ணூற்றாறு பக்கங்களில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இப்பதிப்பில் கையாளப்பட்டுள்ள மேற்கோள் நூல்களின் (நாற்பதிற்கும் மேற்பட்ட நூல்கள்) பட்டியலே மூன்று பக்கங்கள் உள்ளன. பிற உரைப் பதிப்புகளில் காணப்படாத உரைப்

பொருளடைவு மட்டுமே நூறுபக்கங்களில் உள்ளது. இஃது இப்பதிப்பின் சிறப்பிற்குக் கட்டியம் கூறுவதாகும்.

நூற்பா அகரவரிசை என்பது எல்லோராலும் இயலுகின்ற பணியாகும். ஆனால், அடிகளாசிரியரின் உரைப்பொருளடைவு என்பது பிறரால் செய்ய இயலாத அருஞ்செயலாகும். உரைப் பொருளடைவு மூலமே பாதி இலக்கணம் புரிந்துவிடும். அடுத்து வருகின்ற உதாரண மேற்கோள்அகராதி பாதி இலக்கணத்தை மனதில் பதிய வைத்துவிடும். ஆக நூல்முழுமையும் சென்று முழுகாமல் மேலெழுந்த வாரியாக முழுகியே முத்தெடுக்கும் வகையில் அடிகளாசிரியர் உரைப் பொருளடைவினையும், உதாரண மேற்கோள் அகராதியையும் தந்து உதவியுள்ளார்.

இப்பதிப்பினைப் பயிலுகின்றவருக்கு நிறைய இலக்கண, இலக்கிய நூல்களின் தோழமை கிட்டும். இதனால். அகன்ற இலக்கண இலக்கியப் புரிந்துணர்வு ஏற்படும். இதுவே இப்பதிப்பின் சிறப்புகளுள் ஒன்றாகும்.

உரையாசிரியர்கள் கூறியுள்ள உதாரண மேற்கோள் பாடல்கள் போதாது என்று கருதிய பதிப்பாசிரியர் மேலும் சிறந்த இலக்கியப் பாடல்களை மேற்கோள்களாகக்காட்டி உரையாசிரியர் களின் கருத்திற்கு அரண் செய்கின்றார். அஃதாவது உரையாசிரியர் கள் முடிக்கக் கருதிய கருத்தின் ஆணிவேரை அடிகளாசிரியர் காட்டி விடுகின்றார்.

நச்சினார்க்கினியர், பேராசிரியர் ஆகியோரின் உரைச் சிறப்பையும் இப்பதிப்பு மிகஅழகாகப் புலப்படுத்தியுள்ளது. உரையாசிரியர் ஒருவரது உரைப்பதிப்பில் பிறஉரையாசிரியர்களை உயர்த்திப் பிடிக்கும் பண்பு அடிகளாசிரியருக்கே உரியதாகும்.

இப்பதிப்பின் இருபத்து ஆறாம் பிரிவாகிய வண்ணம் எழில்மிகுந்த பகுதியாகத் திகழ்கின்றது. அடிகளாசிரியர் தம் முடைய பதிப்பாசிரியர் விளக்கத்தினால் யாப்பின் எழிற் கடலுக் குள் படிப்பாரைத் தள்ளி மகிழ்ச்சியில் மூழ்கித் திளைக்கச் செய்துள்ளார். ஒவ்வொரு பகுதியும் அவ்வப் பகுதிகளில் ஈர்ப்பு

உடையவர்களை மகிழ்விக்கும் நிலையிலேயே இப்பதிப்பு அமைந்துள்ளது. எனவே இப்பதிப்பின் சிறப்புகளைச் சொல்லி மாளாது என்று வழக்கமான பாணியில் கூறாமல் சிறப்புகளைச் சொல்ல இயலவில்லை என்று பெருந்தன்மையுடன் ஒத்துக் கொள்கின்றேன்.

## 4.7. முடிவுரை

அடிகளாசிரியரின் இலக்கணப்பதிப்பில் தொல்காப்பியச் செய்யுளியல் இளம்பூரணர் உரை என்னும் இவ்வியலின் மூலம் பெறப்பட்ட முடிவுகள்:

1. அடிகளாசிரியர் செய்யுளியல் பதிப்பினைப் பதிப்பிக்கப் பாடுபட்ட செய்திகளை இவ்வியல் எடுத்துரைக்கின்றது. இப்பதிப்பினை உருவாக்கவும் வெளியிடவும் உதவிய தஞ்சாவூர் - தமிழ்ப் பல்கலைக்கழகத்தினை நன்றியுடன் எண்ணி மகிழ் கின்றது.

2. இப்பதிப்பின் செயல்முறைகள் இவ்வாறு இருக்க வேண்டும் என்று வரையறை செய்து கொடுத்த மாண்பமை துணைவேந்தர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களின் பண்பினை நினைவு கூர்கின்றது.

3. எழுபத்து இரண்டு அகவை, நரம்புத் தளர்ச்சி நோய், கண்ணில் புரைவிழுந்தநிலை ஆகிய இவற்றையெல்லாம் கருதாது,

> தகையுடைய மூச்சு முடிவினும் - தளர்விலாத்
> தமிழ்ப்பணி முடியுமுன்னே மடியேன்.

என்று உறுதிபட நின்று, இப்பெரிய நூலினை ஆக்கித்தந்த அடிகளாசிரியரின் உறுதிப்பாட்டினை இவ்வியல் நெஞ்சம் நெகிழ எடுத்துரைக்கின்றது.

4. அடிகளாசிரியர் பதிப்பித்த வரலாற்றை காலக் குறிப்பு களுடன் அடிகளாசிரியரின் சொற்களிலே சில செய்திகளை இவ் வியல் விவரித்துள்ளது.

5. அடிகளாசிரியர் பிற பதிப்பாசிரியர்களினின்றும் மாறுபட்ட வகையில் அமைத்துக் கொண்ட பதிப்பு முறைகளைக் கண்டறிந்து கூறியுள்ளது.

6. அடிகளாசிரியர் பதிப்பித்த இந்நூலின் சிறப்புகளைச் சொல்லிமாளாது என்று வழக்க்மான பாணியில் கூறாமல் சிறப்புகளைச் சொல்ல இயலவில்லை என்று பெருந்தன்மையுடன் ஒத்துக் கொள்கிறது.

சான்றெண் விளக்கம்

1. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல்காப்பியம் பொருளதிகாரம் - செய்யுளியல் - இளம்பூரணர் உரை, பதிப்பாசிரியர் உரை, ப. 11.
2. மேலது, ப. 28.
3. அடிகளாசிரியர் தம் கைப்பட 1982 - ஆம் ஆண்டில் எழுதிய குறிப்புரை.
4. அடிகளாசிரியர் தமகைப்பட 1985-ஆம் ஆண்டில் எழுதிய குறிப்புரை.
5. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் நூற்பா. 74.
6. அடிகளாசிரியர் நேரில் கூறியது. 10.5.2007.
7. மேலது.
8. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல்காப்பியம் பொருளதிகாரம் - செய்யுளியல் - இளம்பூரணர் உரைப்பகுதி, ப. 119.
9. மேலது, பக். 15, 16.
10. மேலது, ப.120.
11. மேலது, ப.121.
12. அடிகளாசிரியர் நேரில் கூறியது, நாள். 10.5.2007
13. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் நூற்பா. 75.
14. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) தொல்காப்பியம் பொருளதிகாரம் - செய்யுளியல் - இளம்பூரணர் உரை, ப. 122.
15. அடிகளாசிரியர் நேரில் கூறியது, நாள் 10.5.2007.
16. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் நூற்பா. 92.

17. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) **தொல்காப்பியம் பொருளதிகாரம் - செய்யுளியல் - இளம்பூரணர் உரை.** ப. 152.
18. மேலது. பக். 153-155.
19. தொல்காப்பியம், பொருளதிகாரம் - **செய்யுளியல்,** நூற்பா. 81.
20. அடிகளாசிரியர் (பதிப்பாசிரியர்) **தொல்காப்பியம் பொருளதிகாரம் - செய்யுளியல் - இளம்பூரணர் உரை,** பக். 133-135.

# முடிவுரை

அடிகளாசிரியரின் இலக்கணப் பதிப்புகள் என்ற தலைப்பில் அமைந்த சொற்பொழிவானது காலங் கடந்து நிற்கின்ற தொல்காப்பியச் சிறப்பையும், இளம்பூரணர் உரைத்திறனையும், அடிகளாசிரியரின் அரிய உழைப்பினையும் தமிழுலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காக நிகழ்த்தப் பெற்றது.

இச்சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்த தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் முனைவர் சி. சுப்பிர மணியம் அவர்கட்கும், பதிவாளர் அவர்கட்கும், ஆட்சிமன்றத் திற்கும், துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர். சா. கிருட்டின மூர்த்தி அவர்கட்கும், பேராசிரியர் முனைவர் திரு. வே. இரா. மாதவன் அவர்கட்கும், துறை விரிவுரையாளர் திரு. சி. இலட்சு மணன் அவர்கட்கும் என்றென்றும் நன்றியுடையேன்.

சொற்பொழிவின் பெருக்கத்தைக் கண்டு அதனை நூல்வடிவில் வெளியிடத் துறைவிரும்பியதால் நூல்வடிவிற் கேற்ப இயல்களும், தலைப்புகளும் தந்து எழுத்து வடிவமாக்கி யுள்ளேன். இப்பணியைக் கோடை விடுமுறையில் செய்து எனது விடுமுறைக் காலத்தைப் பயனுள்ள பணிக்காகச் செலவிட்டதை எண்ணி மகிழ்கின்றேன். மேலும், இப்பொழிவினை நூலாக்கம் செய்வதற்குப் பேருதவியாகக் கணிப்பொறிஅச்சுப்படி ஒன்றினை யும் அதற்குரிய குறுந்தகடு ஒன்றினையும் தயார் செய்து பல்கலைக் கழகத்திற்கு வழங்கியுள்ளேன். இப்பணிக்கு என்னை ஊக்குவித்து இசைவு வழங்கிய எம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர், பதிவாளர், தமிழியல் துறைத் தலைவர் ஆகியோருக்கும் அடியேன் கடப்பாடுடையேன்.

17. [illegible] ([illegible]) தொல்காப்பியம் [illegible] - [illegible] - இளம்பூரணர் உரை, ப. 132.
18. மேலது, பக். 133-135.
19. [illegible] - செய்யுளியல், நூற்பா 87.
20. [illegible] தொல்காப்பியம் பொருளதிகாரம் [illegible] - இளம்பூரணர் உரை, பக். 133-135.

# துணைநூற்பட்டியல்


1. ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய நூற்பா - அடிகளாசிரியர், திரு. தமிழாய்வுத் தொகுதி - விளக்கம் தமிழ்த் துறை சென்னைப் பல்கலைக்கழகம் *1977.*

2. தமிழாய்வுத் தொகுதி-8 - சண்முகம்பிள்ளை., மு. பாலசுப்பிரமணியன், சி. (பொதுப்பதிப்பாசிரியர்) தமிழ்த் துறை சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை. *1978*

3. தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு (முதல் தொகுதி) - தமிழ்ப் பேராசிரியர்கள் பச்சையப்பன் ஆய்வரங்கம் தமிழ்த் துறை பச்சையப்பன் ஆய்வரங்கம் சென்னை - 600 030 முதற்பதிப்பு - டிசம்பர் 1998

| | | | |
|---|---|---|---|
| 4. | திருமந்திரம் | - | திருமூலர்<br>கழகப் பதிப்பு<br>சென்னை<br>1984. |
| 5. | தொல்காப்பியம்<br>(மூலம்) | - | கழக வெளியீடு<br>சென்னை<br>1943. |
| 6. | தொல்காப்பியம்<br>எழுத்ததிகாரம்<br>இளம்பூரணர் உரை | - | அடிகளாசிரியர், திரு.<br>பதிப்பாசிரியர்<br>கரந்தைப் புலவர் கல்லூரி<br>தஞ்சாவூர் - 2<br>முதற்பதிப்பு - 1969 |
| 7. | தொல்காப்பியம்<br>- பொருளதிகாரம்<br>செய்யுளியல்<br>(இளம்பூரணர் உரை) | - | அடிகளாசிரியர், திரு.<br>பதிப்பாசிரியர்<br>தமிழ்ப் பல்கலைக்கழகம்<br>மறுதோன்றி அச்சகம்<br>தஞ்சாவூர்<br>நவம்பர் - 1985 |
| 8. | தொல்காப்பியம்<br>- சொல்லதிகாரம்<br>இளம்பூரணர் உரை | - | அடிகளாசிரியர், திரு.<br>பதிப்பாசிரியர்<br>தமிழ்ப் பல்கலைக்கழகம்<br>தஞ்சாவூர்<br>முதற்பதிப்பு - செப்டம்பர் 1988 |
| 9. | நன்னூல் | - | தமிழ்ப் பல்கலைக்கழகம்<br>தஞ்சாவூர்<br>1984. |